Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, MARCH 16, 2023

வியாழக்கிழமை மார்ச் 16, 2023 | ஒளி: 08 கதிர்: 230 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## ஊதிப்பெருத்த ரூபாயில் காற்றுப் போகிறது




இலங்கை மத்திய வங்கியால் புதன்கிழமை (15) வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களில் அடிப்படையில், அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி மேலும் சரிவடைந்துள்ளது.

தொடர்ச்சி P2

## பதவிகள் மாறியதும் முடிவுகளிலும் மாற்றம்

### “ஒப்பந்தங்களை மறைக்கிறார் ரணில்” –சஜித்



ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியான பின்னரும் கூட, சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை தற்போது மறைத்து வருகின்றார் என்று தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, பதவிகள் மாறியதும் தீர்மானங்களிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

தொழிற்சங்கங்களின்

# கைகள் ஓங்கின



**உறுதிமொழியை அடுத்து இன்றுடன் வாபஸ்**

**பாடசாலைகள் உள்ளிட்ட பல இடங்கள் வெறிச்சோடின**

**நோயாளிகள் கடும் அசௌகரியம்**

**அரச வங்கிகளில் கால் பங்கு இயங்கவில்லை**

தமது கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்ததை அடுத்து, புதன்கிழமை (15) காலை 8 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட தமது வேலை நிறுத்தத்தை வியாழக்கிழமை (16) காலை 8 மணியுடன் வாபஸ் பெற்றுக் கொள்வதற்கு தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு தீர்மானித்தது.

தொடர்ச்சி P2

ஐஎம்எப் கடன் மறுசீரமைப்பு

## உத்தரவாதம் வழங்க 4 நாடுகள் இணக்கம்



சர்வதேச நாணய நிதியத்துக்கு கடன் மறுசீரமைப்பு உத்தரவாதங்களை வழங்க மேலும் நான்கு நாடுகள் முன்வந்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## இலகு ரயில் திட்டத்தை ஆரம்பிக்க ஆலோசனை

### நிதியுதவி வழங்க ஜப்பான் இணக்கம்

2020ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2024ஆம் ஆண்டில் நிறைவடைய இருந்த நிலையில் தாமதப்படுத்தப்பட்ட கொழும்பு - மாலபே இடையிலான இலகு ரயில் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க அரசாங்கம் ஆலோசனை மேற்கொண்டு வருகிறது. இதற்கான அமைச்சரவை அனுமதி கிடைத்ததன் பின்னர்,

தொடர்ச்சி P2



சட்டக் கல்லூரி பரீட்சைக்கு ஆங்கிலம்:

## ஆலோசனை குழு உடன்படவில்லை

இலங்கையின் சட்டக் கல்லூரி அனுமதிப் பரீட்சைக்கு தனி ஆங்கில மொழியில் தோற்ற வேண்டும் என்றும் பரீட்சை மொழியாக ஆங்கிலத்தை கட்டாயம் ஆக்குவதற்கு சட்டக் கல்விப் பேரவை எடுத்த தீர்மானத்துக்கு நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு தொடர்பான அமைச்சர்களின் ஆலோசனைக் குழு உடன்படவில்லை என்று தெரியவருகிறது.

தொடர்ச்சி P2

குடு சலிந்துவின் மனு குறித்து

## நிலைப்பாட்டை அறிவிக்குமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவு

தனது உயிருக்கு பாதுகாப்பு வழங்குமாறு கோரி குடு சலிந்து என்றழைக்கப்படும் சலிந்து மல்ஷிக சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு குறித்த நிலைப்பாட்டை அறிவிக்குமாறு சட்டமா அதிபருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம், புதன்கிழமை (15) உத்தரவிட்டது.

போதைப்பொருள் வியாபாரி என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ள குடு சலிந்து, மடகஸ்காரில் கைது செய்யப்பட்டு புதன்கிழமை (15) இலங்கைக்கு அழைத்துவரப்பட்டார்.

தொடர்ச்சி P2

## ஹாசிமின் மனைவிக்கு நிபந்தனை பிணை




பாறுக் ஷிஹான்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சுமார் நான்கு வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலின் தலைவரான சஹ்ரான் ஹாசிமின் மனைவிக்கு கல்முனை மேல் நீதிமன்றம் பிணை வழங்கியது.

தொடர்ச்சி P2

## இலங்கை பொலிஸாருக்கு சீன சீருடைத் துணி




சீன அரசாங்கத்திடமிருந்து இலங்கை பொலிஸ் திணைக்களத்துக்கு நன்கொடையாகக் கிடைத்த பொலிஸ் சீருடைத் துணிகளை உத்தியோகபூர்வமாக பொலிஸ் திணைக்களத்துக்கு கையளிக்கும் நிகழ்வு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் திங்கட்கிழமை (15) முற்பகல் இடம்பெற்றது.

தொடர்ச்சி P2


## ரயிலில் பெண் சிசுவைக் கைவிட்ட ஜோடிக்கு 17 வரை விளக்கமறியல்



கொழும்பு, கோட்டையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணிக்கவிருந்த ‘மீனகயா’ ரயிலின் கழிவறையில் சிசுவை கைவிட்டுச் சென்ற தாய் மற்றும் தந்தையை எதிர்வரும் 17ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே, புதன்கிழமை (15) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

## ஏப்ரல் 25இல் சாத்தியமில்லை



தேசிய தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளமைக்கு அமைய எதிர்வரும் ஏப்ரல் 25ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது சாத்தியமில்லை என்று சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு அமைப்பு (பஃப்ரல்) தெரிவித்துள்ளது.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவத்த பஃப்ரலின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி, மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.


தொடர்ச்சி P2



## தேர்தலுக்கு நிதி கோரி மீண்டும் கடிதம்

தேர்தல் ஆவணங்களை அச்சிடும் நடவடிக்கைகளுக்காக பணம் வழங்குமாறு கோரி திறைசேரிக்கு மீண்டும் கடிதம் அனுப்பியுள்ளதாக அரசாங்க அச்சக அதிகாரி கங்கானி லியனகே தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




## ஏழு வெந்நீர் ஊற்றும் பறிபோகும் அபாயம்

இராவணன் தன் தாயின் இறுதி கிரிகைகளுக்காக தனது வாள் கொண்டு உருவாக்கியதாக இலக்கியங்களில் சொல்லப்படும் திருகோணமலை கன்னியா ஏழு வெந்நீர் ஊற்றும் பறிபோகும் அபாயத்தில் தொங்கிக்கொண்டிருக்கின்றது.

அந்த கன்னியா ஏழு வெந்நீர் ஊற்று கிணறுகளை பார்வையிட வருவோரிடம் இருந்து கட்டணம் அறவிடப்படுகின்றது. அதற்காக கட்டணச்சீட்டும் விநியோகிக்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2

## ஹரக் கட்டா, குடு சலிந்து அழைத்து வரப்பட்டனர்




பாதாள உலக உறுப்பினர்களான ஹரக் கட்டா என்றழைக்கப்படும் நதுன் சிந்தக விக்ரமரத்ன மற்றும் குடு சலிந்து என்றழைக்கப்படும் சலிந்து மல்ஷிக ஆகியோர் புதன்கிழமை (15) நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## பதவிகள் மாறியதும் முடிவுகளிலும் மாற்றம்

தற்போதைய ஜனாதிபதி எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்த போது, சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் உடன்படிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று அப்போது நிதி அமைச்சராக இருந்த பசில் ராஜபக்சவிடம் கோரினார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மஹர பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை (14) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சட்டமன்றம், நிறைவேற்று மற்றும் நீதித்துறை ஆகியவை இணைந்து செயல்பட்டாலும், நாட்டில் தற்போது சர்வாதிகார நிறைவேற்று அதிகாரமே ஆட்சிமுறைமியிலுள்ளதாகவும், அதன் மூலம் உயர்நீதிமன்றத்தையும், நீதிபதிகளையும் அவமதித்து மிதிக்கும் நிலைக்கு நாட்டு ஆட்சியாளர்கள் வந்துள்ளனர் எனவும் குறிப்பிட்டார்.

நீதிமன்றத் தீர்ப்புகளைக்கூட சவாலுக்குட்படுத்துவதன் மூலம் அரசியலமைப்பின் மூலம் வழங்கப்பட்ட மக்களின் வாக்குரிமைக்கு கூட சவால் விடுக்கப்படுவதாக சுட்டிக்காட்டினார்.

ஒரு நாடு என்ற வகையில் நாம் ஒரு திருப்புமுனையை எதிர்கொண்டுள்ளோம் என்றாலும், தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான யானை காக்கை மொட்டு அரசாங்கம் இதற்கு இடமளிப்பதாக இல்லை என்றார்.

இந்தத் திருப்புமுனையை அரசாங்கம் எதிர்கொண்டால் அவர்களுக்கு எந்த உத்தரவாதமும் இல்லாது போகும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மக்கள் விரோத,மக்கள் எதிர்ப்பு, ஒடுக்குமுறைசார் இந்த அரசாங்கம்,வரி விதித்து,பொருட்களின் விலையை உயர்த்தி மக்களின் கையில் இருக்கும் கடைசி விலங்கைக் கூட பறித்து, பொருளாதாரத்தை சுருக்கி வருவதையே செயல்படுத்தி வருவதாகவும் குறிப்பிட்டார்.

பொருளாதாரத்தை விருத்தி செய்து, மக்களின் கைகளில் பணம் செல்வதற்கான வழிகளை உருவாக்குவதும் தான் நடக்க வேண்டிய செயல்பாடு எனவும் தெரிவித்தார்.

கேள்வியை குறைப்பதற்காக இந்த வரிச் சுழற்சியை அரசாங்கம் செயல்படுத்தி வருவதாகவும், இதனால் பணவீக்கம் குறைவடைந்து நாடு இயல்பு நிலைக்கு மீளும் என நினைத்தாலும் அது உண்மையில் தவறான செயல் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## உத்தரவாதம் வழங்க 4 நாடுகள் இணக்கம்

சவூதி அரேபியா, பாகிஸ்தான், ஹங்கேரி மற்றும் குவைத் ஆகிய நாடுகள் சர்வதேச நாணய நிதியத்துக்கு கடன் மறுசீரமைப்பு உத்தரவாதங்களை வழங்கியுள்ளன என்று அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

லண்டனில் உள்ள மார்ல்பரோ மாளிகையில் உள்ள பொதுநலவாய தலைமையகத்தில் இடம்பெறும் 22ஆவது பொதுநலவாய வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக லண்டனுக்கு அமைச்சர் விஜயம் செய்துள்ளார்.

> டிஜிட்டல் இணைப்பை மேம்படுத்துதல் போன்ற பகிரப்பட்ட சவால்களுக்கு கூட்டுப் பிரதிபலிப்புக்களை கலந்துரையாடும் வகையில் வெளிவிவகார அமைச்சர்களை ஈடுபடுத்தவுள்ளது

பொதுநலவாய வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டத்திற்கு முன்னதாக, பொதுநலவாய உறுப்பு நாடுகளை ஒன்றிணைக்கும் மதிப்புக்கள் மற்றும் அபிலாஷைகளை சுட்டிக் காட்டும் பொதுநலவாய சாசனம் கைச்சாத்திடப்பட்ட 10ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் பொதுநலவாய தினக் கொண்டாட்டங்களில் அமைச்சர், இன்று (13) பங்கேற்பார்.

இந்த ஆண்டுக்கான பொதுநலவாய வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டமானது, அமைதியான மற்றும் நிலையான சமூகங்களுக்கு பின்னடைவைக் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியம், சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கான காலநிலை நிதியுதவி மற்றும் பொருளாதார மீட்சி, உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்புக்கான பொதுநலவாய வர்த்தகம் மற்றும் டிஜிட்டல் இணைப்பை மேம்படுத்துதல் போன்ற பகிரப்பட்ட சவால்களுக்கு கூட்டுப் பிரதிபலிப்புக்களை கலந்துரையாடும் வகையில் வெளிவிவகார அமைச்சர்களை ஈடுபடுத்தவுள்ளது.

இந்நிலையில், மேற்குறிப்பிட்ட 4 நாடுகளும் கடன் உத்தரவாதம் வழங்குவதாக அமைச்சர் தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# கைகள் ஓங்கின

சுகாதாரம், கல்வி, தபால், மின்சாரம், ரயில்வே உள்ளிட்ட பல தொழிற்சங்கங்களால் புதனன்று (15) முன்னெடுக்கப்பட்ட ஒரு நாள் வேலை நிறுத்தம் காரணமாக நாட்டில் பல சேவைகள் முடங்கியதுடன், பொதுமக்களும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் கடும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தனர்.

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நியாயமற்ற வரி கொள்கை, வங்கி வட்டி வீதத்தை குறைத்தல், வாழ்க்கைச் செலவு நிவாரணத்தை வழங்குதல், மின்சார கட்டணத்தை குறைத்தல் ஆகிய கோரிக்கைளை முன்வைத்து வேலை நிறுத்தம் முன்னெடுக்கப்பட்டது.

வைத்தியர்கள், பேராசிரியர்க ள்,விரிவுரையாளர்கள், மின்சார பொறியியலாளர்கள், வங்கி சேவை ஊழியர்கள், பெற்றொலிய கூட்டுத்தாபன ஊழியர்கள் உள்ளிட்ட 47 தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தில் ஈடுபட்டன.

அதிபர், ஆசிரியர், தாதியர், சுகாதார சேவை, தபால், அரச முகாமைத்துவ சேவைகள், சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட தொழிற்சங்கங்களும் வேலை நிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்தன.

ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு செல்லாத காரணத்தால் பாடசாலை கல்வி செயற்பாடுகள் முடங்கியதுடன், பாடசாலைகள் வெறிச்சோடிக்காணப்பட்டன. வைத்தியர்கள், தாதியர்கள் உள்ளிட்ட சுகாதாரத் துறையைச் சேர்ந்த அதிகமானோர் வேலை நிறுத்தத்தில் பங்கேற்றதால், அவசர சிகிச்சைகள் தவிர்ந்த செயற்பாடுகள் அரச வைத்திய சாலைகளில் செயலிழந்திருந்தன.

ரயில்வே ஊழியர்களின் வேலை நிறுத்தத்தை பொருட்படுத்தாமல் பயணிகளின் வசதிக்காக புதன் (15) காலை 20 அலுவலக ரயில்கள் இயக்கப்பட்டதாகவும் பிற்பகலில் 9 ரயில் சேவைகள் இயக்கப்பட்டதாகவும் ரயில்வே பொது முகாமையாளர் தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்து சபையின் அனைத்து 107 டிப்போக்களும் காலை 11.00 மணி வரை வழமையான கால அட்டவணையின்படி இயங்குவதாக இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் உறுதிப்படுத்தினார்.

08 தொழிற்சங்கங்களில் மக்கள் விடுதலை முன்னணியின் தொழிற்சங்கம் தவிர்ந்த 07 தொழிற்சங்கங்கள் முழுமையாக ஒத்துழைப்பவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், காலை 10.30 மணி நிலவரப்படி 75 சதவீதத்துக்கும் அதிகமாக அரச வங்கிகள் இயங்கியதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

வேலைநிறுத்தம் இருந்தபோதிலும், தலைமை அலுவலகம் மற்றும் 265 கிளைகள் உட்பட இலங்கை வங்கியின் அனைத்துப் பிரிவுகளும் இயங்குகின்றன என்று அதன் பொது முகாமையாளர் ரசல் பொன்சேகா உறுதிப்படுத்தினார்.

அதேவேளை, 340 கிளைகளில் 272 கிளைகள் 75 வீதத்துக்கும் அதிகமான வருகையுடன் முழுமையாகச் செயற்படுவதாக மக்கள் வங்கியின் செயல் அதிகாரி கிளைவ் பொன்சேகா உறுதிப்படுத்தினார்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் பிற தொழிற்சங்கங்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட நிலையில், 6,600 லீற்றர் கொண்ட 300 லோட் பெற்றோல் மற்றும் டீசல் ஆகியவை வழமையான செயற்பாடுகளை பராமரிப்பதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பெற்றோலிய கூட்டுத்தாபன தலைவர் எம். யூ.மொஹமட் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்தில் துறைமுக ஊழியர்கள் வேலைநிறுத்தத்தை ஆரம்பித்த நிலையில், கொழும்பில் உள்ள இலங்கை துறைமுக அதிகாரசபையில் இடம்பெற்ற போராட்டத்தின் போது பதற்றம் ஏற்பட்டது.

துறைமுக அதிகாரசபை தலைவரும் ஏனைய அதிகாரிகள் குழுவும் துறைமுக ஊழியர்களை கப்பல் நடவடிக்கைகளுக்கு அனுப்ப முயற்சித்ததை அடுத்து, வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த ஊழியர்களுக்கும் நிர்வாக அதிகாரிகளுக்கும் இடையில் துறைமுகத்துக்குள் பதற்றநிலை ஏற்பட்டதாக இலங்கை பொது துறைமுக ஊழியர் சங்கத்தின் தலைவர் நிரோஷன் கோரகனகே தெரிவித்தார்.

பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காத பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கை தொடரும் என்று சங்கங்கள் அறிவித்திருந்த நிலையில், கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்ததையடுத்து வேலை நிறுத்தத்தை கைவிடுவதாக புதன்கிழமை (15) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தொழிற்சங்க பிரதிநிதிகள் அறிவித்தனர்.

## நிலைப்பாட்டை அறிவிக்குமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவு

அவருடைய தாயாரால் தாக்கல் செய்யப்பட்ட மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதியரசர் ஏ. மரிக்கார் முன்னிலையில் பரிசீலிக்கப்பட்டது.

அதன்போது, தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு குறித்த நிலைப்பாட்டை எதிர்வரும் மார்ச் 20ஆம் திகதி அறிவிக்குமாறு நீதியரசர்கள் குழாம் உத்தரவிட்டது.


## இலகு ரயில்...

திட்டத்தை மீள ஆரம்பிக்க ஆலோசித்து வருவதாக வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு, புதன்கிழமை (15) தெரிவித்துள்ளது.

16 கிலோ மீற்றர் நீளமான 16 நிலையங்களைக் கொண்ட குறித்த திட்டத்துக்கு 1.85 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைய ஜப்பான் விஜயத்தின் போது ஜப்பானிய அரசாங்கம் இத்திட்டத்துக்கு நிதியுதவி வழங்க இணங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை பொலிஸாருக்கு...



இந்த நன்கொடை தொடர்பான ஆவணங்கள், இலங்கைக்கான சீனத் தூதுவர் சி ஷென் ஹொங்கினால் ஜனாதிபதி முன்னிலையில் பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பான அமைச்சர் டிரான் அலஸிடம் கையளிக்கப்பட்டது.

பின்னர் ஜனாதிபதியும் நன்கொடைகளை பார்வையிட்டதுடன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## தேர்தலுக்கு நிதி கோரி மீண்டும் கடிதம்

திறைசேரியின் நடவடிக்கை பிரிவுக்கு குறித்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த கடிதத்தின் பிரதியை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கும் அனுப்பியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அச்சக நடவடிக்கைகளுக்கான பணத்தை பெற்றுத்தருமாறு கோரி இதற்கு முன்னர் நிதி அமைச்சுக்கு கடிதம் அனுப்பிய போதிலும், அதற்கு எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என்றார்.

தேர்தல் ஆவணங்களை அச்சிடுவதற்கு தமது திணைக்களம் 500 மில்லியன் ரூபாயைக் கோரியுள்ள போதும் இதுவரை 40 மில்லியன் ரூபாயைப் பெற்றுள்ளதாகவும் அந்த நிதி அது போதுமானதாக இல்லை என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதியை வழங்குமாறு கோரி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த 12ஆம் திகதி தெரிவித்தது.

## ஊதிப்பெருத்த...

அதற்கிணங்க, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 327 ரூபாய் 59 சதமாகவும் விற்பனை விலை 344ரூபாய் 66 சதமாகவும் பதிவாகியுள்ளது.

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை விலைகள், நேற்று முன்தினத்துடன் (14) ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளன.

அமெரிக்க டொலரின் கொள்வனவு விலை 319 ரூபாய் 84 சதமாகவும் விற்பனை பெறுமதி 335 ரூபாய் 68 சதமாகவும் செவ்வாய்க்கிழமை (14) பதிவாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மார்ச் 1ஆம் திகதிமுதல் அதிகரித்து வந்த ரூபாயின் பெறுமதி மார்ச் 10ஆம் திகதி முதல் குறைந்து வருகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

## ரயிலில் பெண்...

கடந்த வெள்ளிக்கிழமை (10) பிளாஸ்டிக் கூடையொன்றில் சிசுவை வைத்து, ரயில் கழிவறையில் விட்டுச் சென்ற தந்தை ஆகியோர் கொழும்பில் இருந்து பண்டாரவளை, கொஸ்லந்த வீடுகளுக்கு சென்றிருந்த நிலையில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கொஸ்லந்த மீரியபெத்தயில் வசிக்கும் 26 வயதான தந்தை மற்றும் பண்டாரவளை நாயபெத்த தோட்டத்தில் வசிக்கும் 25 வயதான தாய், கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டு, பண்டாரவளை பதில் நீதவான் முன்னிலையில் ஞாயிற்றுக்கிழமை ஆஜர்படுத்தப்பட்டனர்'

இருவரையும் புதன்கிழமை (15) வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட பதில் நீதவான், அன்றைய தினத்தில் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறும் கட்டளையிட்டார்.

அதற்கமைய கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட சிசுவின் தாய் மற்றும் தந்தையின் விளக்கமறியல் உத்தரவை நீடிக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

சட்ட ரீதியில் திருமணம் செய்யாத இருவரும் கொழும்பில் ஒருவரையொருவர் சந்தித்து காதல் வயப்பட்டிருந்ததாகவும் கடந்த மாதம் 25 ஆம் திகதி இவர்களுக்கு பெண் சிசு பிறந்ததுள்ளதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

## ஏழு வெந்நீர்...

வருமான முகாமை மற்றும் பராமரிப்பு என்பன பௌத்த அடையாளம் இருப்பதாக சொல்லப்பட்டு தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

விநியோகிக்கப்படும் கட்டணச்சீட்டில், இது அநுராதபுர காலத்தில் பயன்படுத்தியதாகவும், தொல்லியல் சான்றுகளால் நிரூபிக்கப்பட்ட பௌத்த மத வளாகத்தில் இது அமைந்திருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஹாசிமின்...

இந்த வழக்கு கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஜயராம் ட்ரொக்ஸி முன்னிலையில் நேற்று (15) விசாரணைக்கு வந்தபோதே கடும் நிபந்தனைகளுடன் பிணை வழங்கப்பட்டது.

பிரதிவாதி ஹஹ்ரானின் மனைவி சார்பாக சிரேஸ்ட சட்டத்தரணி ருஸ்தி ஹபீப் தலைமையில் சட்டத்தரணிகளான நிஸ்வான் உவைஸ் அர்சாத் குழுவினர் ஆஜராகி இருந்தனர்.

சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் வழக்கினை நெறிப்படுத்திய அரச சட்டவாதி லபீர், ஸஹ்ரானின் மனைவியினால் ஏற்கெனவே வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் தொடர்பில் ஆட்சேபனை எழுப்பப்பட்டது.

ஏன் பிணை வழங்கப்பட வேண்டும் என்பது தொடர்பில், பிரதிவாதி சார்பாக ஆஜரான சட்டத்தரணிகள் மன்றில் சுட்டி காட்டி விண்ணப்பங்களை சமர்ப்பித்தனர்.

சுமார் 4 வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்ட விடயத்தை விசேட காரணியாக ஏற்றுக்கொண்டும் இதர காரணங்களை முன்வைத்தும் பிணை வழங்கப்பட வேண்டும் என விசேட கோரிக்கையை முன்வைத்ததை அடுத்து கடும் நிபந்தனைகளுடன் பிணை வழங்கப்பட்டது.

இதன் போது 25, 000 ரூபாய் பெறுமதியான ரொக்கப் பிணை மற்றும் 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரு சரீர பிணைகளில் செல்ல அனுமதித்த நீதிபதி, பிரதிவாதி வெளிநாடு செல்லவும் பிணையாளர்கள் வெளிநாடு செல்லவும் தடை உத்தரவு பிறப்பித்தார்.

மேலும் ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை குற்றப் புலனாய்வு பிரிவு அலுவலகத்தில் ஸஹ்ரான் ஹாஷிமின் மனைவி ஆஜராகி கையொப்பமிடல் வேண்டும் என உத்தரவிட்டார்.

## ஏப்ரல் 25இல் சாத்தியமில்லை

அரசாங்கம் மக்களின் வாக்குரிமையை பறிக்கும் என்று தாங்கள் எதிர்பார்க்கவே இல்லை என்றும் நீதிமன்ற தீர்ப்புகளைக்கூட புறக்கணிக்கும் நிலையில் இருப்பது வருந்தத்தக்கது என்றும் குறிப்பிட்டார்.

ஜனநாயகத்தின் மூன்று தூண்களான சட்டமன்றம், நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறை ஆகியவற்றின் சமநிலை இப்போது முற்றிலும் சீர்குலைந்துள்ளது என்றார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தாமதப்படுத்த சதி செய்து வந்ததாகக் குறிப்பிட்ட அவர், பாராளுமன்ற சிறப்புரிமைகளுக்குப் பின்னால் மறைந்திருக்கும் நீதிமன்றத்

## ஹரக் கட்டா – குடு சலிந்து அழைத்து வரப்பட்டனர்

இன்டர்போல் மற்றும் மடகாஸ்கன் சட்ட அமுலாக்க பிரிவின் கூட்டு முயற்சியின் விளைவாக மார்ச் 1ஆம் திகதியன்று மடகாஸ்கரில் உள்ள இவட்டோ சர்வதேச விமான நிலையத்தில் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் விசேட குழுவினரால் அழைத்துவரப்பட்ட இருவரும் மற்றும் மேலும் நான்கு சந்தேக நபர்களும் கட்டுநாயக்க பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக காலை 7.20 மணியளவில் நாட்டை வந்தடைந்தனர்.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களான சந்தேகநபர்கள் இருவரையும் இரண்டு மடகாஸ்கன் அதிகாரிகள் இலங்கை குடிவரவு அதிகாரிகளிடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைத்தனர்.

பின்னர் பலத்த பாதுகாப்புடன் சந்தேகநபர்கள் குற்றப் புலனாய்வு திணைக்கள தலைமையகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.


அக்கரைப்பற்று



அக்கரைப்பற்று


பதுளை


பதுளை



மட்டக்களப்பு


மட்டக்களப்பு


மட்டக்களப்பு


மட்டக்களப்பு

# வெறிச்சோட்டம்

வரி அதிகரிப்பு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு உள்ளிட்ட பல அம்ச கோரிக்கைகளை முன்வைத்து 40க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் நாடளாவிய ரீதியில், நேற்று (15) பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தன. இதனால், வடக்கு, கிழக்கு, மலையகம் உள்ளிட்ட பகுதிகளில், வைத்தியசாலைகள், வங்கிகள், பாடசாலைகள் அரச நிறுவனங்கள் என்பவற்றில் சேவைகள் இடம்பெறவில்லை.

(தமிழ்மிரர் நிருபர்கள்)




மன்னார்



மன்னார்


வவுனியா


மாங்குளம்



ஒலுவில்


நீர்கொழும்பு



ஒட்டுசுட்டான்


முல்லைத்தீவு


முல்லைத்தீவு





ஏறாவூர்



ஹட்டன்



யாழ்ப்பாணம்


யாழ்ப்பாணம்


கல்முனை


கல்முனை



கிளிநொச்சி



கிளிநொச்சி



மாங்குளம்

கிளிநொச்சி மாவட்டத்தில்

# போதைப்பொருள் பாவனை, சட்டவிரோத மணல் அகழ்வுகள் கட்டுப்படுத்தப்படும்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தில், போதைப்பொருள் பாவனை, சட்டவிரோத மணல் அகழ்வுகள் என்பவற்றை கட்டுப்படுத்துவதற்கு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் முதலாவது மீளாய்வு கூட்டம் நேற்று முன்தினம் (14) மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் கலந்துகொண்டு, ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். தொடர்ந்து தெரிவிக்கையில், மாவட்டத்தில்



போதைப்பொருள் பயன்பாட்டை கட்டுப்படுத்துவது, அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு அமைவாக உணவு பாதுகாப்பு வேலை திட்டங்களை முன்னெடுத்தல், சட்டவிரோதமான மணல் அகழ்வுகளை கட்டுப்படுத்தல், கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், விவசாயிகளிடம் இருந்து தனியார் மிகக் குறைந்த விலையில் நெல்லை கொள்வனவு செய்து வந்த நிலையில், அரசின் கொள்கைகளுக்கு அமைவாக ஒரு கிலோ கிராம் நெல்லின் விலை நூறு ரூபாய் என்ற அடிப்படையில் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார்.



## நாகர்கோவிலில் வன்முறைக் கும்பல் அட்டகாசம்

■ எஸ். தில்லைநாதன்

நாகர்கோவில் மேற்கு பகுதியில் உள்ள வீட்டின் மீது, நேற்றுமுன்தினம் (14) இரவு இனந்தெரியாத நபர்கள், பெற்றோல் குண்டு வீச்சு மேற்கொண்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் ஒரு மோட்டார் சைக்கிள் முற்றாக எரிந்து நாசமாகி உள்ளதுடன், இன்னொரு மோட்டார் சைக்கிள் பகுதியளவில் எரிந்து சேதமாகியுள்ளது. அத்துடன் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளும் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன.

எனினும், இந்த வன்முறை சம்பவத்தை மேற்கொண்டவர்கள் யார் என இதுவரை தெரியவரவில்லை. இச்சம்பவம் குறித்து பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அரிசி

■ செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாய செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளின் நெல்லை கிலோ கிராம் 100 ரூபாய்படி கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் கமநலசேவைகள் திணைக்களம், தனியார் நெல் ஆலை உரிமையாளர்கள் ஊடாக மேற்கொண்டுள்ளது.

விவசாயிகளிடம் இருந்து தனியார், அறாவிலையில் நெல்லைக் கொள்வனவு செய்கின்றார்கள். 6,200 ரூபாய் வரை நெல்லைக் கொள்வனவு செய்கின்றார்கள். ஆனால், கமநலசேவைகள் திணைக்களம் 7,100 ரூபாய்க்கு நெல்லைக் கொள்வனவு செய்கின்றது,

> **“ தனியார், 6,200 ரூபாய் வரை நெல்லைக் கொள்வனவு செய்கின்றார்கள். ஆனால், கமநலசேவைகள் திணைக்களம் 7,100 ரூபாய்க்கு கொள்வனவு செய்கின்றது**

சமுர்த்தி பயனாளிகளுக்கு அரிசி வழங்குவதற்காக கண்டி மாவட்டத்தில் இருந்தும் கோரிக்கை முன்வைக்கப்பட்ட நிலையில், யாழ்ப்பாணத்தில் உள்ள சமுர்த்தி பயனாளிகளுக்கு தேவையான அரிசியை, அதாவது 38 இலட்சம் கிலோ கிராம் நெல்லை கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் அரசாங்கத்துக்கு நெல்லை கிலோ கிராம் 100 ரூபாய்க்கு விற்பனை செய்துகொள்ளலாம்.









மன்னார் மாவட்ட செயலாளருக்கு

## ‘சிங்க பெண்’ கௌரவம்

மன்னார் மாவட்டத்தில் மகளிர் தின விழாவும், சாதனைப் பெண்களுக்கான விருது வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் (14) மன்னார் நகர சபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. யாழ், பல்கலைக்கழகத்தின் பால் நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத்துக்கான நிலையம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், இலங்கை ஏதிலியர் மறுவாழ்வு கழகம் என்பன இணைத்து மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஒழுங்கமைப்பில் இந்த விழா நடைபெற்றது. யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சிறி சற்குணராஜா பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இந்நிகழ்வில், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் வலய கல்வி பணிப்பாளர் செல்வி சி.தே தேவராஜா, மடு வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி அ.சி வொலன்ரைன், மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் டொக்டர் வைத்திய அதிகாரி நிஷாந்தினி நடராசா ஆகியோர் கலந்து கொண்டனர். இதன் போது, சாதனைப் பெண்களுக்கான விருது வழங்கல் நிகழ்வில், மூத்த பெண்கள் கௌரவிக்கப்பட்டதுடன் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ. ஸ்ரான்லி டிமெல்க்கு, மன்னார் இந்து மத பீடத்தால் ‘சிங்க பெண்’ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

எஸ். றொசேரியன் லெம்பேட்

## பலாலி வடக்கில் மீள்குடியேற்றம் தொடர்பில் கள விஜயம்



■ எஸ். றொசேரியன் லெம்பேட்

பலாலியில் பெப்ரவரி மூன்றாம் திகதி 108 ஏக்கர் காணிகள், மீள்குடியேற்றத்துக்காக விடுவிக்கப்பட்ட நிலையில், முகாம்களில் வசித்து வரும் குடும்பங்களின் மீள்குடியேற்றத்துக்கு, திட்ட முன்னெடுப்புகளை யாழ். மாவட்ட செயலகமும் வலிகாமம் வடக்கு பிரதேச செயலகமும் முன்னெடுத்து வருகின்றன.

விடுவிக்கப்பட்ட பலாலி பகுதிகளில் உள்ள மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் பார்வையிடும் முகமாகவும் தற்காலிக வீட்டு திட்டங்களை வழங்குவதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பாகவும் ஆராய்வதற்கு றகாமா நிறுவனம், நோர்வேயை தளமாகக் கொண்டு இயங்கும் போருட் நிறுவனம் ஆகியவை இணைந்து செவ்வாய்க்கிழமை (14) கள விஜயம் மேற்கொண்டிருந்தன.

மீள்குடியேற்றத்தை விரைவுபடுத்தவும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கவும் குறித்த விஜயம் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

# “அபிவிருத்தியடைந்து வரும் நாடாக தொடர்ந்தும் இலங்கையை வைத்திருக்க முடியாது”

## அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம் சப்ராஸ்

■ நூருல் ஹுதா உமர்

சமுர்த்தி பயனாளிகள் தொடர்ந்தும் சமுர்த்தி பெறுபவர்களாக இருக்காமல் தொழில் முயற்சியாளர்களாக மாறவேண்டும். எல்லா விடயங்களுக்கும் அரசாங்கம் வழங்கும் இலவசத்தை நோக்கிக் காத்திராமல், சுயமாக முன்னேற வேண்டும். தொடர்ந்தும் தலைமுறை தலைமுறையாக அபிவிருத்தியடைந்து வரும் நாடாக இலங்கையை வைத்திருக்க முடியாது. இதை மாற்றியமைக்க எங்களிலிருந்து மாற்றத்தை உருவாக்கி, சொந்தக்காலில் நிற்கும் வகையில் மாற வேண்டும் என அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம் சப்ராஸ் தெரிவித்தார்.

சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்கு, சாய்ந்தமருது சமுர்த்தி சமுதாய அடிப்படை



அமைப்பின் விடய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப் றிகாஸா ஷர்பீனின் முயற்சியால் உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு மலேசியா மற்றும் உள்நாட்டு தனவந்தர்களின் நிதிப்பங்களிப்புடன் பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் (14) சமுர்த்தி வங்கி சங்க கூட்ட மண்டபத்தில், சமுர்த்தி வங்கி சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.எல் யூ.ஜுனைதா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் செயலாளர் எம். முபீதாவின் உதவியுடன் சாய்ந்தமருது - 05 ஆம் பிரிவு மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

அக்கரைப்பற்று நீதிமன்ற ஆவண காப்பகத்துக்கு

## தீ வைத்தவர்களுக்கு தொடர்ந்து விளக்கமறியல்

■ எம்.எஸ்.எம் ஹனீபா

அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற ஆவண காப்பகத்தை தீயிட்டு எரித்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மூன்று சந்தேக நபர்களையும் எதிர்வரும் 28ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம் ஹம்ஸா செவ்வாய்க்கிழமை (14) உத்தரவிட்டார்.

டிசெம்பர் மாதம் புதன்கிழமை (21) அதிகாலை நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு வைக்கப்பட்ட தீயால், நீதிமன்றின் பதிவேட்டு அறை, திறந்த நீதிமன்றம் போன்ற பல பிரிவுகளிலுள்ள ஆவணங்கள் முற்றாக எரிந்தன. இச்சம்பவம் தொடர்பான விசாரணையை, விசேட பொலிஸ் குழு மேற்கொண்டு, சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.



## ‘CakMeAway’க்கு முதலிடம்

■ நூருல் ஹுதா உமர்

அம்பாறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ‘அவள் தேசத்தின் பெருமைக்குரியவள்’ எனும் தொனிப்பொருளில் அமைந்த சர்வதேச மகளிர் தின நிகழ்வுகளில் பிரதம அதிதியாக மாவட்ட செயலாளர் ஜே.எம்.ஏ டக்ளஸ் கலந்துகொண்டிருந்தார்.

இந்நிகழ்வின் ஓர் அங்கமாக, மாவட்டம் ரீதியில் கேக் உற்பத்தியாளர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களுக்கான போட்டி இடம்பெற்றது. இதன்போது கல்முனையைச் சேர்ந்த திருமதி ஏ.சி பாத்திமா ரிப்னாவின் ‘CakMeAway’ நிறுவனத்தால் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த கேக்,




நடுவர்களால் முதல் பரிசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## உடற்கல்விப் பீட பொறுப்பாளர்

■ அஸ்ஹர் இப்றாஹிம்

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உடற்கல்வி பீட பொறுப்பாளராக கிழக்கு மாகாண கராத்தே சம்மேளனத் தலைவரும் சர்வதேச மாஸியல் சம்மேளனத்தின் தலைவரும், தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் கராத்தே பயிற்றுவிப்பாளருமான சாய்ந்தமருதைச் சேர்ந்த முஹம்மது இக்பால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியின் பழைய மாணவர் ஆவார்.





காட்டு யானைக் கூட்டம்

## ஊருக்குள் ஊர்வலம்

■ ரீ.எல் ஜவ்பர்கான்

அம்பாறை மாவட்டத்தின் மாவடிப்பள்ளி பிரதேசத்தில், ஊருக்குள் நுழைந்த யானைக் கூட்டத்தால், மக்கள் மத்தியில் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டதுடன் போக்குவரத்துக்கும் சிறிது நேரம் பாதிப்பு ஏற்பட்டது.

நேற்று முன்தினம் மாலை (14) சம்மாந்துறை பகுதி காட்டிலிருந்து, மாவடிப்பள்ளி பிரதேசத்துக்குள் நுழைந்த யானைக் கூட்டம், வயல் நிலங்களை நாசம் செய்து விட்டுச் சென்றுள்ளது.

அண்மைய நாள்களில், அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளில், காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்து உள்ளமையால் மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர், காரைதீவு பிரதேசத்தில் அறுவடை செய்து வைக்கப்பட்டிருந்த 350 நெல் மூட்டைகளை நாசமாக்கியதும் குறிப்பிடத்தக்கது.

## ஊடகச் சட்டங்கள், குற்றங்களும் தண்டனைகளும் செயலமர்வு

■ ஆர். ஜெயஸ்ரீராம்

‘கருத்து வெளிப்பாட்டு உரிமையும் நெறிமுறைகளுடன் கூடிய ஊடகப்பாவனையும்’ எனும் தொனிப்பொருளில், மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் தோறும் நடைபெற்று வரும் இந்தச் செயலமர்வின் ஒரு நிகழ்வு, வந்தாறுமூலை தேசிய தொழில் பயிற்சி அதிகார சபையில் நடைபெற்றது.

இரண்டு நாள்களாக நடைபெற்ற செயலமர்வின் இறுதி நாள், ஊடகச் சட்டங்கள், குற்றங்களும்




தண்டனைகளும் எனும் தலைப்பிலான செயலமர்வும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது. அதிதிகளாக தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபையின் பிரதிப பணிப்பாளர் வி. கனகசுந்தரம், மனிதாபிமானத் தொண்டு நிறுவனத்தின் நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் வி. கண்ணன் ஆகியோர்கள் கலந்துகொண்டனர். வளவாளர்களாக சிரேஷ்ட ஊடகவியலாளர் க.ருத்திரன், எம். ருக்ஷி ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பு

# 4ஆவது அகவையில் கால் பதிக்கிறது

RUKA

என்றும் மக்கள் சேவையினை நோக்கிய பயணத்தில் இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் நான்காவது ஆண்டு விழா, நாளை 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது. நிகழ்வுகள் காலை 7 மணிக்கு சூரியகந்தை ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயத்தில் விசேட பூஜையுடன் ஆரம்பமாகும்.

இ/எம்பி எக்பர்த் தமிழ் மகா வித்தியாலய க.பொ. த.சாதாரண தர மாணவர்களுக்கும் இ/எம்பி ஹேய்ஸ் தமிழ் வித்தியாலய க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்குமான இலவச கருத்தரங்கு காலை 8:30க்கு இடம்பெறவுள்ளது. தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான இலவச மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வு மாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தோட்டப்புற இளைஞர்கள் மற்றும் யுவதிகளின் விளையாட்டு திறனை ஊக்குவிக்கும் முகமாக பலாங்கொடை இணைப்பாளரின் ஏற்பாட்டில் சிசில்டன் தோட்ட இளைஞர்களுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி 19.03.2023 அன்று இடம்பெறவுள்ளது.

பல்வேறு தடைகளை கடந்த புதிய பரிணாமங்களுடன் நான்காவது ஆண்டில் இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பு கால் தடம் பதிக்கிறது. பல சவால்களை வெல்லும் சமூகம் என்று எண்ணக்கருவுடன் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17ஆம் திகதி ஆர். ரமேஸ்வரனால் கொவிட்-19 குழு என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது.

மக்களுக்கு பல்வேறு வகையில் நிவாரணங்களை வழங்கும் விதமாக செயற்பட்டு வருவதனால் இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பு என பெயர் மாற்றம் செய்யப்பட்டு நிர்வாக கட்டமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. காலத்திற்கும் நேரத்திற்கும் ஏற்ற வகையில் கல்விக்கு கரம் கொடுப்போம் தோட்டப்புறமெங்கும் வீட்டுக்கு ஒரு பட்டதாரியை உருவாக்குவோம் என்ற தொனிப்பொருளின் கீழ் உன்னதமான கல்விப்பணி களை முன்னெடுத்து வருகின்றது.

இரத்தினபுரியை தளமாக கொண்டு செயற்பட்டாலும் கூட மாகாணம், மாவட்டம் கடந்து இலங்கை முழுவதும் மலையக மக்களுக்காக உன்னதமான பணிகளை முன்னெடுத்து வருகிறது.

அமைப்பின் தலைவர் ரமேஸ்வரன், பிரதி தலைவர் கே.சிவசுப்பிரமணியம், செயலாளர் ஆசிரிய ஆலோசகர் தயாளன், பிரதி செயலாளர் ஆசிரியர் மனோகரன், ஊடகத்துறை இணைப்பாளர் அஜித் குமார், நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் விநாயகமூர்த்தி மற்றும் வர்த்தக நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் ஏகாம்பரம் ஆகியோர் உயர்மட்ட அங்கத்தவர்களாக இருந்து திறம்பட வழிநடத்தி வருகின்றார்கள்.

இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பினால் கடந்த நான்கு வருடங்களாக முன்னெடுக்கப்பட்டுவரும் சேவைகள் அளப்பரியவை. சமூக, கலை, கலாசார விடயங்களை மேம்படுத்தும் வகையில் பல்வேறு விடயங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இரத்தினபுரி மாவட்டத்தில் மட்டுமல்லாது மத்திய, தென் மாகாணங்களில் வாழும் மலையக தமிழர்களுக்காகவும் உன்னதமான பணிகளை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது.

இதனைத்தொடர்ந்து சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள மாணவர்களுக்கு இடையில் விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் வகையில் 'விஞ்ஞான தீபம்' என்ற செயற்றிட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மூன்று பாடசாலைகளுக்கு அதிநவீன ஸ்மார்ட் வகுப்பறைகளை அமைத்துக் கொடுப்பதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 2024ஆம் ஆண்டளவில் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் பட்டதாரிகளை உருவாக்க வேண்டும் என்று தொலைநோக்கு சிந்தனையுடன் இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பு செயற்பட்டு வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

கடந்த நான்கு வருடங்களாக கைகோர்த்து தங்களுடைய பேராதரவுகளை வழங்கிய அனைவருக்கும் ஆர்வத்தோடும் இளைஞர் யுவதிகளின் எதிர்காலத்திற்காக முன்வந்து செயற்பட்ட அனைவருக்கும் இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பு நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றது.

எதிர்வரும் 17 ஆம் திகதி இடம்பெறவுள்ள இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் நான்காம் ஆண்டு பூர்த்தி நிகழ்விற்கு அனைவரையும் அன்புடன் இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பு அழைக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ராமு தனராஜா

காணிகளை வெளியார் ஆக்கிரமிக்கையில்

# “நிர்வாகம் மௌனம்”

நமுனுகலை பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்கும் பதுளை நமுனுகலை இதகல தோட்ட காணியை வெளியார் பலவந்தகமாக ஆக்கிரமித்துள்ளனர். அதனை அறிந்தும் தோட்ட நிர்வாகம் மௌனம் காக்கின்றது என்று இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளரான வடிவேல் சுரேஷ் எம்.பி குற்றஞ்சாட்டினார்.

பெருந்தோட்டங்களில் தொழில் புரியும் தொழிலாளர்கள் தங்களுடைய நலனுக்காக மலசல கூடத்தை விஸ்தரிக்கவோ அல்லது சமையலறையை விஸ்தரிப்பு செய்தாலோ தொழிலாளர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ளும் தோட்ட நிர்வாகம், இன்று இதகல தோட்டத்தில் 50 ஏக்கர் காணியை வெளியார் ஆக்கிரமிப்பு செய்திருந்தும் கூட மௌனிப்பது ஏன் என்று கேள்வியெழுப்பினார்.

காணி சுவீகரிப்பு விளைவாக இதகல தோட்ட தொழிலாளர்கள் அச்சமடைந்துள்ளார்கள்; மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்றார்.

நிலைமை தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு நமுனுகுல பெருந்தோட்ட நிறுவனத்துக்கு அறிவித்துள்ளேன்.

தோட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கை ஒன்றின் ஊடாக பிரச்சினைக்கு தீர்வு பெற்று தரப்படும் என்றார்.

மலையகப் பெருந்தோட்ட காணிகளின் வெளியார் அபகரிக்கும் செயற்பாடு தொடர்கின்றது. இவ்விடயம் தொடர்பில் பாராளுமன்றத்தில் பலமுறை நான் எடுத்துரைத்துள்ளேன். பெருந்தோட்ட மலையக மக்களின் காணி உரிமை தொடர்பில் முறையான தீர்வு ஒன்று பெற்றுத் தரப்பட வேண்டியது அவசியமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.



# இணைந்து செயற்பட்டதால் முன்னேற்ற முடிந்தது

அரசாங்கங்களோடு இணைந்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செயற்பட்டதால் மலையகத்தில் பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்த முடிந்தது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவரும், ஜனாதிபதி செயலணியின் கல்வி அபிவிருத்தி உறுப்பினருமான கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.



மலையக மக்கள் இலங்கையில் உரிமைகள் பறிக்கப்பட்ட ஓர் ஒதுக்கப்பட்ட இனமாக இருந்த நிலையை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மாற்றி அமைத்தது. காங்கிரஸின் சாணக்கியமான அணுகுமுறையால் இதனை செய்யமுடிந்தது என்றார்.

காலத்துக்கு காலம் இருக்கின்ற அரசாங்கங்களோடு இணைந்து செயற்பட்டதால் பறிக்கப்பட்ட பிரஜா உரிமையை மீட்டெடுக்க முடிந்தது. எல்லோருக்கும் இலவச கல்வி என்ற நிலை இருந்தபோது அது மலையக மாணவர்களுக்கு மட்டும் மறுக்கப்பட்டது. மலையகத் தோட்ட பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்று நடத்துவதற்கும், சீடா செயற்றிட்டம், ஜிடிசெட் ஆகியவற்றின் நிதி உதவியோடு பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்வதற்கும் முடிந்தது என்றார்.

ஆசிரியர் பயிற்சி கல்லூரி, ஸ்ரீ பாத கல்வியல் கல்லூரி, தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையம் என்பவற்றுடன் தோட்டப் பாடசாலைகளுக்கு நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகளும் மலையகத்துக்கு வந்து கிடைத்தன. கல்வித் துறை மட்டுமல்லாமல் இலங்கை பொலிஸ் சேவையிலும், சமூர்த்தி, கிராம உத்தியோகஸ்தர்கள் உட்பட பல்வேறுஅரச துறைகளில் மலையகத் தமிழர்கள் உள் நுழைவதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பெற்றுக் கொண்ட அமைச்சு பதவிகளே காரணமாக இருந்தன என்றார்.

நாட்டின் பொருளாதார சூழ்நிலை காரணமாக மக்கள் கொதித்தெழுந்தபோது மக்களின் உணர்வுகளை மதித்து, எமது பொது செயலாளர் ஜீவன் தொண்டைமான், தான் வகித்த இராஜாங்க அமைச்சு பதவியில் இருந்து வெளியேறினார். இந்த நிலையில் எமது மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்து கின்ற எதிர்க்கட்சிகள் கூட அமைச்சரவை அந்தஸ்துடன் கூ டிய அமைச்சுப் பொறுப்பை ஜீவன் பொறுப்பேற்க வேண்டும் என்ற கருத்தை முன் வைத்திருந்தன. தற்போது அமைச்சராக ஜீவன் தொண்டமான் பொறுப்பேற்றவுடன் இந்திய வீடமைப்பு திட்டத்தை தொடர்வதற்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. அதேபோல தேங்கி கிடந்த பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகள் கிடைத்து இருக்கின்றன. மலையக பல்கலைக்கழகம் தொடர்பான முன்னெடுப்புகள் தற்போது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன என்றார்.



# நீர்விநியோகத் திட்டம் கையளிப்பு

காமினி பண்டார இலங்கதிலக்க

மஸ்கெலியா, ப்ரௌன்ஸ்வீக் தோட்டத்தில் நீண்ட நாள்களாக நிலவிய சுத்தமான குடிநீர் பிரச்சினைக்கு ஐரோப்பிய இலங்கை அபிவிருத்திக்கான ஒன்றியத்தின் அனுசரணையில், சுமார் 300 குடும்பங்கள் பயன்பெறும் வகையில், நீர் விநியோகத்திட்டம் கையளிக்கப்பட்டது.



# இடுப்பில் துப்பாக்கி சிப்பாய்க்கு சிறை

எம்.கிருஸ்ணா

இடுப்பில் செறுகி வைத்திருந்த நிலையில், கைத்துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரான இராணுவ சிப்பாயை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஹட்டன் நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சென்ஜோன் டிலரி பகுதியில் வீடொன்றுக்குள் கைத்துப்பாக்கி இருப்பதாக கிடைத்த தகவலின் பிரகாரம் அந்த வீட்டை சேர்ந்தவர், திங்கட்கிழமை (13) விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

கைது செய்யப்பட்ட



சந்தேக நபர் இராணுவத்தில் கடமையாற்றி எழு மாதங்களுக்கு முன்னர் விலகியவர் என நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

# சுகாதார நிகழ்ச்சித்திட்டம்



சிவா ஸ்ரீதரராவ்

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி சப்ரகமுவ மாகாண பிரதான அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட மருத்துவ மற்றும் சுகாதார நிகழ்ச்சித்திட்டம் இரத்தினபுரியில் அமைந்துள்ள சப்ரகமுவ மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது விசேட வைத்தியர்களால் பல்வேறு நோய்களை தடுப்பதற்கான மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டதுடன் பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, சப்ரகமுவ மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் பிரபாத் உதாகர, மாகாண ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் மஞ்சுளா இதிகாவெல மற்றும் அரச சேவையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தீப்பந்தமேந்தி ஆர்ப்பாட்டம்

செ.தி.பெருமாள்

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள ப்ரௌன்ஸ்வீக் தோட்ட ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு முன்பாக, செவ்வாய்க்கிழமை இரவு தீப்பந்தமேந்தி பொதுமக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்கள் விடுதலை முன்னணி ஏற்பாட்டில் சுமார் 200 பேர் தோட்ட தொழிலாளர்கள் கலந்துகொண்ட இந்த எதிர்ப்பு போராட்டம் இரவு 9 மணிமுதல் 12 மணிவரையிலும் நடைபெற்றது.

அத்தியாவசியப் பொருட்களின் விலை கடந்த யுத்தம் நடந்த காலத்தை விட பன் மடங்கு அதிகரித்துள்ளது . இதனால் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளது என்றும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்தவர்கள் சுட்டிக்காட்டினர்.

# உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?

கடந்த வாரத்தில் கொடி கட்டி, உயர உயரப் பறந்த இலங்கை ரூபாயின் பெறுமதி, மீண்டும் வீழ்ச்சி காண ஆரம்பித்துள்ளது. இந்த மதிப்பு உயர்வுக்கான காரணம் தொடர்பில், தமிழ்மிரரில் ஏற்கெனவே ஆராய்ந்திருந்த நிலையில், தற்போது ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி காண்பது, ஒரு விதமான சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது.

வழமையாக, நாணயமாற்று வீதங்களைத் தீர்மானிக்கும் பொறுப்பை, இலங்கை மத்திய வங்கி கொண்டுள்ளது. நாட்டில் தேர்தல் தொடர்பில் பெருமளவில் பேசப்பட்ட நிலையில், விலையேற்றங்களுடன் அரசாங்கத்தின் தீர்மானங்களால் பொதுமக்கள் விரக்தியும் அதிருப்தியும் அடைந்துள்ள நிலையில், மக்கள் மனங்களில் இடம் பிடிப்பதற்காக, நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றம் கண்டுவருவதாக காண்பிப்பதற்காக இந்த நடவடிக்கை கட்டவிழ்த்துவிடப்பட்டு உள்ளதா என்றும், பொருளாதார நிபுணர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

நாட்டில் இறக்குமதி செய்யப்படும் எரிபொருள் அடங்கலாக, அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் போன்றவற்றின் விலை நிர்ணயங்களின் போது, இந்த விலைத் தளம்பல்களின் தாக்கம் பெருமளவு செல்வாக்குச் செலுத்துகின்றது.

கடந்த வாரம் இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டு உள்ளதாக அறிவிப்புகள் வெளியாகி இருந்தன. பாண், கொத்து, கேக் போன்ற உணவுப் பொருட்களின் விலைகளும் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இம்மாதத்தில் நிலவும் சராசரி நாணயமாற்று விகிதத்தின் பிரகாரம், எரிபொருள் சூத்திரத்துக்கமைய விலை தீர்மானிக்கப்படும். இந்நிலையில், இவ்வார முற்பகுதியில், எரிபொருள் விலைகளில், விலை குறைக்கப்படுவதற்கு அதிகளவு வாய்ப்புகள் காணப்படுவதாக எரிசக்தி அமைச்சர் தெரிவித்திருந்தார். எரிபொருட்களின் விலைகள் குறைவடைவது என்பது, அதைச் சார்ந்த சகல பொருட்கள், சேவைகளின் விலைகளின் வீழ்ச்சியில் பங்களிப்புச் செலுத்தும்.

தமிழ், சிங்கள புத்தாண்டு பண்டிகைக் காலம் நெருங்கி வரும் நிலையில், இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு உள்ளமையானது, மக்கள் மத்தியில் பண்டிகைக் கொண்டாட்ட உணர்வை ஏற்படுத்தும் 'கண்துடைப்பாக' அமைந்திருக்கலாம்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து நிதி உதவி கிடைத்துவிட்டால், நாடு மீண்டும் வழமைக்குத் திரும்பிவிடாது. அந்த உதவியைக் கொண்டு, நாட்டின் கடன்களை மறுசீரமைப்பு செய்வதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகளை பொறுப்பதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், நாட்டின் மீட்சிக்கு இது முக்கியமானதாகும்.

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு அவ்வப்போது சில தீர்வுகள் நிவாரணங்களாக கிடைத்தாலும், எந்நேரத்திலும் வரிசைகளில் காத்திருக்க வேண்டிய நிலைக்கு நாடு மீண்டும் செல்லலாம்.

இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு, சாதாரணமாக பத்து வருடங்கள் வரை தேவைப்படும். அதில் நாம் இரண்டு வருடங்களைக் கடந்துவிட்டோம். இன்னும் எட்டு வருடங்கள் கடந்து செல்ல வேண்டும்.

அந்தப் பயணத்தில், அவ்வப்போது 'ஊர்க்குருவிகள்' சில உயர உயரப் பறக்க முயலும். ஆனால், அவற்றைக் கண்டு 'பருந்து' என மக்கள் ஏமாறாமல், விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதை, நாம் வலியுறுத்திக் குறிப்பிட விரும்புகின்றோம்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# தேர்தலை நடத்தாது தொடர் போராட்டங்கள் ஓயாது



புருஜோத்தமன் தங்கமயில்

தொடர் போராட்டங்களால் கொழும்பு 'அல்லோல கல்லோலம்'படுகிறது. கொழும்பு நகரத்தின் எந்தப் பிரதான வீதியில், எப்போது போராட்டம் ஆரம்பிக்கும், போக்குவரத்து தடைப்படும் என்று யாராலும் சொல்ல முடியாது. ஒவ்வொரு நாளும் பல தொழிற்சங்கங்களும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும், கட்சிகளும் போராட்டங்களை நடத்துகின்றன. இந்தப் போராட்டங்களுக்கு எதிரான அடக்குமுறைகளை இராணுவத்தையும் பொலிஸாரையும் கொண்டு ரணில் விக்கிரமசிங்க அரசு ஏவுகின்றது. போராட்டங்களில் காலாவதியான கண்ணீர்புகைக் குண்டுகள் வீசப்படுவதாக போராட்டக்காரர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்தப் போராட்டங்களை, கட்டுக்குள் கொண்டுவருவது ஒன்றும் அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. இந்தப் போராட்டங்களால், நாட்டின் இயல்பான நடவடிக்கைகள் மாத்திரமன்றி, தொழில் நடவடிக்கைகளும் முடங்குகின்றன. இதனால் ஏற்படும் பொருளாதார இழப்பும், கல்வி நடவடிக்கைகளில் பின்னடைவும் சுட்டிக்காட்டத்தக்கன.

நேற்று (15) கூட, ஆசிரியர்கள் உள்ளிட்ட அரச ஊழியர்கள் சுகவீன விடுப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். இதனால், மூன்றாம் தவணைக்கான பரீட்சைகள் பிற்போடப்பட்டிருந்தன.

ஏற்கெவே, 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நடைபெற்றிருக்க வேண்டிய மூன்றாம் தவணைப் பரீட்சைகள், நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிகள், ராஜபக்‌ஷர்களுக்கு எதிரான போராட்டங்களால் நான்கு மாதங்கள் கடந்து நடைபெறுகின்றது.

இவ்வாறான நிலையில், அந்தப் பரீட்சைகள் மீண்டும் காலம் தாழ்த்தி நடத்தப்படும் சூழல் ஏற்பட்டிருக்கின்றது. குறிப்பாக, மேல் மாகாணத்தில் பரீட்சைகள் பிற்போடுவதற்கான அறிவித்தல் வெளியிடப்பட்டு இருக்கின்றன.

கடந்த ஆண்டு பரீட்சை நடந்து முடியாமல், இந்த ஆண்டின் முதல் காலாண்டுப் பரீட்சையை எவ்வாறு நடத்துவது என்ற கேள்வி எழுகின்றது. இவ்வாறு ஒவ்வொரு கட்டத்திலும், நாட்டு மக்கள் தொடர் நெருக்கடிகளைச் சந்தித்து வருகிறார்கள்.

நாட்டை பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளிய ராஜபக்‌ஷர்களை வீட்டுக்கு அனுப்பும் போராட்டங்களை மக்கள் முன்னெடுத்த போது, விரைவாக தேர்தல் ஒன்றின் ஊடாக, புதிய அரசாங்கமொன்று அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்திருந்தனர்.

ஆனால், ராஜபக்‌ஷர்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க, தேர்தல்களை நடத்தாது, ஒற்றை மனிதராக, சர்வாதிகார ஆட்சியொன்றைப் பேணுவது குறித்து, சிந்தித்துச் செயலாற்றுகிறார்.

மார்ச் மாதம் ஒன்பதாம் திகதி நடத்தப்படும் என்று தேர்தல் ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலை, நிதியை வழங்காது ரணில் ஒத்திப்போட வைத்துவிட்டார். எதிர்க்கட்சிகளும் பொது அமைப்புகளும் நீதிமன்றத்தை நாடி, ஒத்திப்போடப்பட்ட தேர்தலை நடத்துவதற்கான ஆணையை வாங்கியிருக்கின்றன.

ஏப்ரல் 25ஆம் திகதி அந்தத் தேர்தலை நடத்துவது என்று, தேர்தல் ஆணைக்குழு மீண்டும் அறிவித்திருக்கின்றது. ஆனால், அதனை நடத்துவதற்கான நிதியை திறைசேரி விடுவிக்குமா என்ற கேள்வி எழுகின்றது.

நாட்டில் தேர்தல்கள் முறையாக நடத்தப்பட்டு, ஜனநாயக ரீதியான ஆட்சி அமையாத வரையில், போராட்டங்கள் ஓயப்போவதில்லை; மக்கள் இயல்பு வாழ்க்கைக்குள்ளும் செல்லப்போவதில்லை. இன்றைக்கு தேர்தலொன்று நடைபெற்றால், பிரதான தரப்புகளாக சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் இருக்கும் என்கிற நிலை காணப்படுகின்றது.

ஆட்சியமைப்பதற்கான போட்டியில், இரு தரப்புகளுமே இருக்கும் என்பது தென் இலங்கையின் உணர்நிலை. அப்படியான நிலையில், தேர்தலை நடத்துவது தங்களின் எதிர்கால ஆட்சி - அதிகார கனவுகளில் பாறாங்கல்லை எறிவதற்கு சமமானது என்பது ரணிலினதும், ராஜபக்‌ஷர்களினதும் நிலைப்பாடு.

அப்படியான நிலையில், ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி மீதான மக்களின் அபிமானம் குறையும் வரையில், தேர்தல்களை ஒத்திவைப்பதைத் தவிர வேறு வழியில்லை. அதனால்தான், தேர்தல்களை ஒத்திவைப்பதற்கான அனைத்து சதித்திட்டங்களையும் ரணிலும் ராஜபக்‌ஷர்களும் மேற்கொண்டு வருகிறார்கள்.

பௌத்த பீடங்கள், கத்தோலிக்க பேராயர் இல்லம் என்று நாட்டின் முக்கிய மத நிறுவனங்கள் தொடங்கி, சமூக இயக்கங்களும் தொழில் சங்கங்களும் எதிர்க்கட்சிகளும், உடனடியாக தேர்தலை நடத்துமாறு கோருகின்றன. திங்கட்கிழமை (13) அஸ்கிரிய, மல்வத்து பீடங்களின் மகாநாயக்கர்கள், தேர்தலை உடனடியாக நடத்துமாறு ரணிலுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

இனியும் தேர்தலை நடத்தாது விட்டால், தென்இலங்கையில் தங்கள் மீதான மதிப்பு மேலும் கீழிறங்கும் என்று ரணில் - ராஜபக்‌ஷ தரப்புகளுக்குத் தெரியும். ஏனெனில், ராஜபக்‌ஷர்களை ஒவ்வொரு முறையும் ஆட்சியில் அமர்த்துவதற்கு பௌத்த பீடங்கள் எவ்வாறு உதவின என்பது அனைவருக்கும் தெரியும்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில், தென் இலங்கையின் ஒவ்வொரு கிராமத்திலுள்ள பௌத்த விகாரைகளும் கோட்டாபய ராஜபக்‌ஷவை ஜனாதிபதியாக்க வேண்டும் என்று பெரும் பிரயத்தனத்தோடு பிரசாரத்தை மேற்கொண்டன. அப்படிப்பட்ட நிலையில், நாட்டின் பல தரப்புகளும் தேர்தலை நடத்துமாறு கோரிய நிலையில், இறுதியாக தவிர்க்க முடியாமல் அஸ்கிரிய, மல்வத்து பீடங்களும் தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதிக்கு கடிதம் எழுத வேண்டி ஏற்பட்டிருக்கின்றது.

இந்த நெருக்கடியையும் தாண்டி, தேர்தலை நடத்தாது ஒத்திவைப்பது என்பது அவ்வளவுக்கு சாத்தியமில்லை. ஏனெனில், மீண்டும் ஆட்சிக்கனவை நோக்கி ஓடுவதற்கு, இனவாதமும் மதவாதமுமே உதவும் என்பது ராஜபக்‌ஷர்களின் நம்பிக்கை. அதற்கு, பௌத்த பீடங்களின் ஒத்துழைப்பு அவசியம். அதனால், பௌத்த பீடங்களோடு இப்போது இணங்கிச் செல்வதுதான் எதிர்கால அரசியலைக் காப்பாற்றும் என்பது அவர்களின் நினைப்பு. குறிப்பாக, நாமல் ராஜபக்‌ஷவை பத்து ஆண்டுகளுக்குப் பின்னராவது, ஆட்சியில் அமர்த்துவதற்கு உதவும் என்பது மஹிந்தவின் எதிர்பார்ப்பு.

ஆனால், ரணில் இந்த நெருக்கடிகளை எல்லாம் பூச்சாண்டிகளாக மாத்திரமே காண்கிறார். அவருக்கு அடுத்த ஜனாதிபதி தேர்தல் குறித்தே சிந்தனை இருக்கின்றது. அதில் எப்படி வெல்வது? அதற்கு என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்பதுதான் இப்போதைய இலக்கு.

கடந்த வாரம் திடீரென அமெரிக்கா டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதியை அதிகரித்தது. கடந்த எட்டு மாதங்களில், குறிப்பாக ரணில் ஜனாதிபதியானதும் இலங்கையின் பொருளாதாரம் ஸ்திரமடைந்து, ரூபாயின் பெறுமதி அதிகரித்ததாக அரசாங்கம் அறிவித்தது.

டொலருக்கு எதிரான ரூபாயின் பெறுமதி 360 ஆகக் காணப்பட்ட நிலையில், கடந்த வாரம் மூன்று நாள்களில் 306 முதல் 309 ரூபாய் வரை வந்தது. இந்தப் பெறுமதி அதிகரிப்பு என்பது, திறைசேரி ஊடாக திட்டமிட்ட ரீதியில் பொய்யாக கட்டமைக்கப்பட்ட ஒன்று என்று எதிர்க்கட்சிகளும் பொருளாதார அறிஞர்களும் வாதிட்டனர்.

இவ்வாறு பொய்யாக ரூபாயின் பெறுமதியை அதிகரித்துக் காட்டினால், இந்த ஆண்டின் இறுதியில் டொலருக்கு எதிரான ரூபாயின் பெறுமதி இழப்பு என்பது, கிட்டத்தட்ட 400 ரூபாயில் கொண்டுவந்து நிறுத்தும் என்பது குற்றச்சாட்டு.

இந்த வண்டவாளங்களை எல்லாம் ரணில் அறியாதவர் அல்ல. அவர் தன்னை, 'நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீட்டெடுத்த தலைவராக முன்னிறுத்தி' மக்களை மடையர்களாக்க நினைக்கிறார். அதன்மூலம் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற நினைக்கிறார்.

பொருட்களின் விலை அதிகரிப்பு, மின்சாரக்கட்டண அதிகரிப்பு தொடங்கி சர்வதேச நாணய நிதியம் உதவி வழங்குவதற்காக விதித்த பல நிபந்தனைகளையும் ரணில் அரசாங்கம் நிறைவேற்றி வருகின்றது. மக்கள் மீதான வரிச்சுமை என்பது, ஏற்கெனவே வாழ்வாதார நெருக்கடியில் இருக்கும் மக்களை, இன்னும் இன்னும் அலைக்கழிக்க தொடங்கி இருக்கின்றது.

அப்படியான நிலையில், தற்போதைக்கு போலியாக ரூபாயின் பெறுமதியை அதிகரிக்கச் செய்துவிட்டு, ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர், ரூபாயின் பெறுமதி அதன் இயல்பான கட்டத்தை அடைந்தால், அதாவது 400 ரூபாய் என்ற நிலையை ஏட்டினால் அதையும் நாட்டு மக்களே தாங்க வேண்டி ஏற்படும்.

மீண்டும் பொருட்களின் விலை அதிகரிப்புத் தொடங்கி, அனைத்து நெருக்கடிகளும் ஏற்படும். தனது ஆட்சி அதிகார வெறிக்காக, ரணில் இவ்வாறான ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார். அதனை, ஜனநாயக விரும்பிகள் என்று கடந்த காலங்களில் பேசிக்கொண்டிருந்த சில புத்திஜீவிகளும், சமூக அறிஞர்களும் கூட ஆதரிப்பது என்பது அற்பத்தனமானது.

நாட்டின் நெருக்கடிகளை கட்டுக்குள் கொண்டுவருவதற்கு தேர்தல்கள் ஊடாக நிலைபெறும் ஆட்சி அவசியமானது. அவ்வாறான ஆட்சியொன்று அமையும் வரையில், நாட்டில் போராட்டங்கள் என்பது தொடர் கதையாகிவிடும்.

அது, மக்களின் இயல்பு வாழ்வை முற்றாக சீர்குலைக்கும். நாட்டின் பொருளாதாரத்தை இன்னும் இன்னும் படுபாதாளத்துக்குள் தள்ளும்.



## வாழ்வியல் தரிசனம்

மனத்தை எங்களிடம் இருந்து பிரிக்க முடியாது. ஆனால், அதைச் செம்மையாக வைத்திருக்க முடியும்.

மனத்துறவு முடியாத காரியம். வாழும்வரை மனிதன் இதனோடு வாழ்ந்துதான் ஆகவேண்டும். வாழும் காலத்தில், நெஞ்சத்துடன் இணைந்த நற்காரியங்களைச் செய்ய முடியும்.

சகல உயிர்களையும் மதித்து அவைகளுக்கு எம்மாலான நற்பணிகளைச் செய்ய வேண்டும். கல்விப்பணி, பொதுநலப் பணி எனப் பல நல்ல காரியங்கள் உண்டு.

எங்களுக்கான பல நல்ல சந்தர்ப்பங்கள் தேடிவரும் போது, அதைப் புரிந்து, உலகுக்கு உங்களால் இயன்ற பணிகளை ஆற்றுக!

இதனால், எமக்குள் ஒரு திவ்விய உணர்வு ஆட்கொள்ளும். உங்களால் ஒருவர் உதவி பெறும்போது, அவர்களின் சந்தோசம் உங்களுடன் இணையும்.

நற்காரியங்கள் புரிவதே, நாங்கள் எடுத்த பிறவிக்கான நல்ல சந்தர்ப்பம். அதன்போது, உங்களுக்குள் ஆன்மிக உணர்வு பரிணமிக்கும்.

மனிதன் தனக்கான வாழ்க்கையை, பிறரின் நன்மைகளுக்காக மட்டும் வழங்குவது பிறவிப்பயன்.

மனிதன் மனிதனாக நற்குணங்களுடன் வாழ வேண்டும் என்பதே, இறைவனின் விருப்பம். வாழ்க்கை இதமாக இருக்க உலகுடன் இணைக!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### கல்முனை மாநகர எல்லைக்குள் சட்டவிரோத கட்டட நிர்மாணம்

கல்முனை மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட சாய்ந்தமருது, கல்முனைக்குடி பிரதேசங்களில், கல்முனை மாநகர சபையின் அனுமதி பெறப்படாமல், கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

உள்ளூர் வீதிகளையும் ஒழுங்கைகளையும் ஆக்கிரமித்து நிர்மாணிக்கப்படும் இப்புதிய கட்டட நிர்மாணங்களால், வீதிகள் ஒடுக்கப்பட்டு, பொதுமக்களும் வாகனங்களும் பயணிப்பதற்கு, மிகவும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

சில கட்டடங்கள் மின்கம்பம், தொலைபேசி கம்பம் நடப்பட்டிருக்கும் எல்லையையும் தாண்டி நிர்மாணிக்கப்படுகின்றன. சிலர் தொலைபேசி கம்பத்தையும் மின்கம்பத்தையும் வைத்தே வீடு கட்டியுள்ளனர். வீட்டுக்கு படிகட்டி, படிக்கு மதில் கட்டி, வடிகான்களுக்கு மேலாகவும் வீட்டின் எல்லை வந்துள்ளது. இதற்கு மேலதிகமாக, சுவரின் கதவை வீதிப்பக்கமாகவும் திறந்தும் வைத்துள்ளனர்.

கட்டட நிர்மாண பொருட்களும் வீட்டு இடிபாடுகளும், பல மாதங்களாக வீதியில் குவிந்து காணப்படுவதால், அடிக்கடி வீதி விபத்துகளும் ஏற்படுகின்றன.

இந்த விடயத்தில் கல்முனை மாநகர சபை உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில், எதிர்காலத்தில் பெரிய வீதிகள் ஒடுங்கி, ஒற்றையடிப் பாதைகளாவதை எவராலும் தடுக்க முடியாது.

எனவே, கல்முனை மாநகர சபையின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறித்த வீதிகளைப் பயன்படுத்தம் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

அஸ்ஹர் இப்ராஹிம்

# மலையகப் பெண்களின் அரசியல் பங்குபற்றல்



வை. பிரதீபன்
(யாழ். பல்கலைக்கழக ஊடகவியல் துறை)



மலையகத் தமிழ் பெண்கள் இலங்கைப் பொருளாதாரத்திலும் மலையக சமூகத்தினை கட்டியெழுப்புவதிலும் முக்கிய பங்கினை வகிக்கின்றனர். ஆனால் ஆணாதிக்கம் நிறைந்த பெருந்தோட்டத்துறையும் ஆணாதிக்கக் கருத்தியல் கொண்டு வளர்க்கப்பட்ட பெருந்தோட்டத் துறை சமூகமும், பெண்களை கடமை செய்யும் ஓர் இயந்திரமாகவே கணிக்கப்பட்டு காலங்காலமாக சுதந்திரமற்ற உரிமையற்ற ஜடமாகவே இருத்தி வைத்துள்ளனர். இவர்கள் இந்த நிலையிலிருந்து வெளிவர வேண்டுமாயின் பெண்களே இயக்கமாக திரண்டு தங்கள் உரிமைகளுக்காகப் போராடினாலேயே விடிவுபிறக்கும் என்ற போக்கு தற்காலத்தில் காணப்படுகின்றது.

ஒடுக்கு முறையிலிருந்து விடுபட அன்று தொட்டு இன்றுவரையும் போராடிக் கொண்டிருக்கும் பெண் சமூகத்தால் இன்னும் முழுமையான விடுதலை பெறமுடியாமல் உள்ளது. அரசியல் பலத்தால் இந்நிலையை தகர்க்கலாம் என்ற தீவிர எண்ணம் இன்றைய பெண்ணிலைவாதிகளிடையே தலைதூக்கியுள்ளதைக் காணமுடிகின்றது. அதேபோல் அரசியல் யாப்பிலும் ஆரம்பத்திலிருந்து பெண்கள் அரசியலில் பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகள் காணப்பட்டிருந்தாலும் போதுமான அளவு அவை வெற்றியீட்டவில்லை. அந்தவகையில் பெண்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு வாக்குரிமை இன்றியமையாதது என்ற கருத்தை 1869ஆம் ஆண்டின் பெண்ணிய செயற்பாட்டாளர்கள் பரப்ப தலைப்பட்டனர். பிரிட்டனில் 1858ஆம் ஆண்டு தேசிய பெண்கள் வாக்குரிமைச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. நியூசிலாந்து பெண்கள் 1893இல் வாக்களிக்கும் உரிமையைப் பெற்றனர். அமெரிக்காவில் மஸாசூட்செட் இராச்சியத்தில் 1691 இலேயே பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை இருந்தும் 1980ஆம் ஆண்டு அந்த உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

1931ஆம் ஆண்டு சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்ட போதும் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் இன்றுவரை குறைந்தளவிலேயே காணப்படுகின்றது. குறிப்பாக பெண்கள் அரசியலில் ஈடுபட்டாலும் அவை ஆண் உறவு முறை செல்வாக்கினை அதிகளவில் கொண்டதாகவே காணப்படுகின்றது. 2001ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலின் போது பெண்ணுரிமைகளைப் பாதுகாக்கும் மகளிர் கொள்கையொன்றை சட்டமாக்குவோம், பெண்களின் விசேட தேவைகளுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் அரச கொள்கை உருவாக்கத்தின் போது முக்கியத்துவம் கொடுப்போம் என்றெல்லாம் உறுதிமொழிகள் வழங்கப்பட்டன.

இலங்கையில் இதுவரையில் நடைபெற்ற தேர்தல்களில் பெண்களின் பங்களிப்பு கணிசமான அளவு காணப்படுகின்றது. எனினும் மலையக பெண்களின் பிரதிநிதித்துவமானது விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே காணப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணம் இலங்கையின் அரசியலில் காணப்படும் ஆணாதிக்கம் சார்ந்த கட்டமைப்புகளின் வெளிப்பாடு மலையக மக்களின் அரசியல் பங்களிப்பிலும் செல்வாக்கு செலுத்துகின்றமை ஆகும். இன்று மக்கள் தொகையில் அரைக்கரைவாசியாக பெண்கள் இருந்த போதிலும் சம உரிமை பெற்றவர்களாக இல்லாமல் முதலாளித்துவ கூட்டமைப்புக்குள் அடிமைகளாகவும் இரண்டாம் தரப்பிரஜைகளாகவும் ஆக்கப்பட்டுள்ளனர். முதலாளித்துவ ஜனநாயகம் என்பது சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் பற்றி அலங்காரமான சொற்றொடர்களாக ஒலிக்கும் ஓசைகளாகும். இவை பெண்களின் யதார்த்த நிலைமையை மூடி மறைக்கின்றன. ஆணுக்கும், பெண்ணுக்கும் ஒரே வாக்குரிமை தான் உள்ளதென சமப்படுத்துவது முதலாளிக்கும், தொழிலாளிக்கும் சமமான வாக்குரிமை உண்டு என சமப்படுத்துவதைப் போலாகும்.

பொதுவாக மலையக மக்களுக்கான அரசியல் ஈடுபாட்டின்மைக்கு முக்கிய காரணியாக இம்மக்களுக்கான அரசியல் அறிவு மற்றும் தெளிவு இன்மை முக்கியக்காரணியாக காணப்படுகின்றது. பாராளமன்றத்தில் மலையக மக்களினை பிரதிபலிக்கின்ற பிரதிநிதிகளின் பற்றாக்குறைக்கு இதுவும் ஒரு காராணியாகும். பொதுவாக ஆண்களுடன் ஒப்பிடும் போது அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவமானது மிக மிக குறைவாகும். மலையகத்தில் உள்ள பாராளுமன்ற அங்கத்துவர்களின் எண்ணிக்கையில் பெண்களின் பங்கினையும் வழங்குவதற்கு அவர்களுக்கான போதுமான அரசியல் தெளிவூட்டல்கள் வழங்கப்படுவதில்லை. இதற்கு முக்கிய காரணியாக பெண்கள் எந்த ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றாமையினையே ஆகும். அதிலும் குறிப்பாக அரசியல் ரீதியாக மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வு செயலமர்வுகள், கட்சி கூட்டங்கள், பிரச்சாரங்களில் பெண்களின் சமூகமளிக்கும் வீதமானது குறைவாக காணப்படுகின்றமையே ஆகும்.

மலையகத்தில் பெண்களின் அரசியல் பங்குபற்றாமைக்கு கல்வி கற்ற பெய்களின் வீதம் அதிகரித்திருந்தாலும் அவர்கள் எந்தவொரு அரசியல் ரீதியான நிகழ்வுகளிலும் பங்குபற்றுவதில்லை. கூட்டங்கள், தெளிவூட்டல்கள் போன்ற அனைத்து விடையங்களிலும் பெண்களின் பங்களிப்பு இன்மை அதிகளவில் காணப்படுகின்றது. மேலும் மலையகத்தில் பெண்கள் கல்விகற்ற பின்னர் குறிப்பிட்ட தொழிலுக்கு செல்வதுடன் சிறிது காலத்தின் பின்னர் திருமணம் முடித்துக்கொடுக்கின்றனர். இதன் மூலம் மலையக பெண்கள் கல்வி கற்றிருந்தாலும் அவர்களின் பங்களிப்பானது முழுமையாக சமூகத்திற்கு எடுத்துச்செல்லப்படுவதில்லை.

மலையகத்தினை பொறுத்த மட்டில் சமூக ரீதியாகவும் தனிப்பட்ட ரீதியிலும் பெண்களின் வளர்ச்சிக்கு பல்வேறுபட்ட கட்டுப்பாடுகள் அன்றிலிருந்து இன்றுவரை காணப்படுகின்றது. பெண்கள் என்றால் வெறுமனே வீட்டு வேலைகளில் ஈடுபடவும், குடும்பத்தினை பார்த்துக்கொள்ளவும், குழந்தைகளினை பராமறிக்கவும் என்று குறிப்பிட்ட எல்லைக்குள் அவர்களின் கடமைகளினை வகுத்து விடுகின்றனர். குறிப்பிட்ட வயதில் கல்வி கற்று முடிக்க வேண்டும், குறிப்பிட்ட வயதில் திருமணம் முடித்துவிட வேண்டும் என்று பெண்களுக்கு மாத்திரம் வகுக்கப்படாத சட்டங்களினை மலையக சமூகத்தினர் வகுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக பெண்கள் அதிகளவில் ஆசிரியர் வேலைகளுக்கே செல்ல வேண்டும். அவர்களுக்கு பொருத்தமான வேலை ஆசிரியர் தொழில் ஒன்றுதான் என்றும் மக்கள் மத்தியில் ஓர் எண்ணப்பாடு காணப்படுகின்றது. அதிலிருந்து விடுபட்டு சமூக சேவைகளிலும் பொது வேலைகளிலும் ஈடுபடுகின்ற பெண்களினை பொதுவாக அனைவரும் ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு எம்மவர் மத்தியில் இன்று காணப்படுகின்றது. இத்தகைய நிலைமையானது குறித்த பெண்களின் தனிப்பட்ட வாழ்க்கையில் பாதிப்பினை ஏற்படுத்தும் என்ற பயத்திலேயே மலையகத்தின் அதிகளவான பெண்கள் இத்தகைய வேலைகளில் ஈடுபடுவது மிக குறைவாகும்.

மலையகத்தினை பொருத்த மட்டில் பெருந்தோட்டங்களில் பெண்களின் உழைப்பே அதிகளவில் காணப்படுகின்றது. ஆண்கள் அதிகளவில் கொழும்பு பிரதேசத்தில் கூலி வேலைகளுக்கு செல்கிறவர்களாக காணப்படுகின்றனர். தேயிலைப் பெருந்தோட்டங்களில் வேலை செய்யும் பெண்களுக்கு வேலைக்கேற்ற வேதனமானது வழங்கப்படுவதில்லை. அதேபோல வேலைத்தளத்தில் பல்வேறு அடக்குமுறைகளுக்கும் பாலியல் ரீதியான சீண்டுதலுக்கும் உள்ளாகின்றனர். அதனை எதிர்த்துக் கேள்வி கேட்கின்ற போது கண்காணிப்பாளர்கள் மற்றும் தோட்ட முகாமையாளர்களின் தனிப்பட்ட பலிவாங்களுக்கு உள்ளாகின்றனர். இத்தகைய முறைமைகளுக்கு பயந்து பெண்கள் தலைமைத்துவப் பொறுப்புகளுக்கு வரவிரும்பாத நிலைமைகள் காணப்படுகின்றன.

மேலும் பெண்களின் அநேகமானோர் ஆணாதிக்கத்தினையே விரும்பி இன்றும் ஆண்களுக்கே வாக்களிக்கும் நிலையில் உள்ளனர். பேண் வாக்காளர் யாவரும் பெண்களுக்கே வாக்களிக்க வேண்டும் என்ற மனோநிலை உருவாக்கப்பட்டால், ஆண்களிலும் பார்க்கப் பெண்களும் அரசியலில் முழுமையான பிரதிநிதித்துவத்தைப் பெறக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. இதற்கு முக்கிய காரணியாக மக்கள் மத்தியில் பெண் பிரதிநிதிகள் தொடர்பான நம்பிக்கையின்மை மற்றும் பரீட்சயமற்ற தன்மைகளினால் பெண் பிரதிநிதிகளுக்கான வாக்களிப்பு வீதம் குறைவாக காணப்படுகின்றது.

மலையகப் பெண்களின் அரசியல் பங்குபற்றுதல் மற்றும் தலைமைத்துவப் பங்குபற்றலினை அதிகரிப்பதற்கு இம்மக்களுக்கு தேவையான விழிப்புணர்வுகிளனை வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கப்படுகின்ற விழிப்புணர்வுகள் குறிப்பிட்ட கால எல்லைக்குள் மாத்திரம் நடாத்தபடாமல் தொடர்ச்சியாக அம்மக்களுக்கு விழிப்புணர்வுகளினை வழங்க வேண்டும். அவ்வாறு விழிப்புணர்வுகிளனை அரசசார்பற்ற நிறுவனத்தின் பெண்கள் சார் அமைப்புகள் மற்றும் பெண்கள் செயற்பாட்டுக் குழுக்கள் பெண்கள் மத்தியில் அரசியல் அறிவு, விழிப்புணர்வூட்ட வேண்டும். அவ்வாறு தெளிவூட்டல்களினை மேற்கொள்கின்ற போது மாத்திரமே மலையக பெண்களின் அரசியல் ரீதியான பங்குபற்றல் அதிகரிக்கப்படும்.

இதனடிப்படையில் நோக்குகின்ற போது ஆரம்பகாலத்தினை விட தற்காலத்தில் மலையக பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் சற்று அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இம்முறை நடைபெறுகின்ற உள்ளூராட்சி தேர்தல்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகளவில் காணப்படுகின்றது. குறிப்பாக கண்டி, நுவரெலியா, மாத்தளை, பதுளை போன்ற மாவட்டங்களில் கறைந்தது ஒரு பிரதேசசெயலகத்தில் 3 பெண் பிரதிநிதகள் தேர்தலில் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய நிலைமையானது மலையக பெண்களின் புதிய அரசியல் பிரவாகத்தினை வெளிக்காட்டுவதுடன் பெண்கள் சமூகத்தினரின் அரசியல் பங்கினையும் எமக்கு வெளிக்காட்டுகின்றது.

# கடற்றொழில் அமைச்சர் விளக்கம்

'வடக்கு கடல் அன்னை மீதான அச்சுறுத்தலைத் தடுப்பது தலையாய கடமை' எனும் தலைப்பில் தமிழ்மிரர் பத்திரிகையில் கடந்த வியாழக் கிழமை(09.03.2023) வெளியான கட்டுரை தொடர்பில்,

கடற்றொழில் அமைச்சரின் ஊடக ஒருங்கிணைப்பாளர் ஶ்ரீகாந் பன்னீர்செல்வம் விளக்கமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அந்த விளக்கத்தில், மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

'வடக்கு கடல் அன்னை மீதான அச்சுறுத்தலைத் தடுப்பது தலையாய கடமை' எனும் தலைப்பில் வெளியாகிய கட்டுரையில் சொல்ல ப்பட்டுள்ள உண்மைக்கு புறம்பான மற்றும் மிகைப்படுத்தப்பட்ட தகவல்கள் தொடர்பாக குறித்த பத்திரிகையின் வாசகர்களுக்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

முதலாவதாக, '50 குதிரை வலுவிற்கும் குறைவான இந்தியக் கடற்றொழிலாளர்களின் மீன்பிடிப் படகுகளை வடக்கு கடலில் வாரத்தில் இரண்டு நாட்கள் மீன்பிடிப்பதற்கு அனுமதிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு அதற்கான செயற்பாடுகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டு வருகின்றார்.' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருத்து எந்த விதமான அடிப்படைகளும் அற்ற, முற்றிலும் உண்மைக்குப் புறம்பான அப்பட்டமான பொய் என்பதை முதலிலேயே தெரிவித்துவிடுவது பொருத்தமாகும்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை பொறுத்தவரையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்திய மீன்பிடிப் படகுகளுக்கு அனுமதி வழங்குவது தொடர்பான கருத்துக்களை வெளியிட்டிருக்கவில்லை.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை பொறுத்த வரையில், எமது வளங்களையும் எமது கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தினை அழிக்கின்ற இந்திய கடற்றொழிலாளர்களின் இழுவைமடி வலைத் தொழில் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டினையே தொடர்ச்சியாக ஆக்குரோஷமாக நீண்ட காலமாக வெளிப்படுத்தி வருகின்றார்.

அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றார். குறிப்பாக இராஜதந்திர ரீதியில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு கட்டமாகவே அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த இந்திய மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் மற்றும் பா.ஜ.க. தமிழக மாநிலத் தலைவர் அண்ணாமலையுடனும் கலந்துரையாடலை மேற்கொண்டதுடன், இந்திய வெளியுறவு அமைச்சர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் அவரை சந்தித்து கடற்றொழிலாளர் விவகாரம் தொடர்பாக கலந்துரையாடி வருகின்றார்.

அதனைவிட இலங்கையில் இருக்கும் இந்தியத் தூதுவர் மற்றும் துணைத் தூதுவர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் தொடர்ச்சியான தொடர்பாடல்களை மேற்கொண்டு வருகின்ற கடற்றொழில் அமைச்சர், புதுடெல்லி மற்றும் தமிழகத்தின் தலைவர்களுடனும், தமிழகத்தின் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடனும் தொலைபேசி ஊடான கலந்துரையாடல்களை நட்பு ரீதியாக மேற்கொண்டு வருகின்றார்.

அதேபோன்று, சட்ட ரீதியான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் கைது செய்யப்படுகின் கடற்றொழிலாளர்கள் நீதிமன்றத்தின் ஊடாக விடுதலை செய்யப்படுவதுடன், படகுகள் அரசுடமையாக்கப்பட்டு, அவற்றை எமது கடற்றொழிலாளர்களுக்கு வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவற்றின் மூலம் சட்ட ரீதியான தொழிலை எமது கடற்றொழிலாளர்கள் மேற்கொள்ள முடியும் என்பதுடன், இந்தியக் கடற்றொழிலாளர்களின் பாரிய படகுகளுக்கு ஈடுகொடுத்து மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியும்.

எனினும், நூற்றுக்கணக்கான இந்தியப் படகுகள் எமது கடல் பரப்பினுள் நுழைகின்ற நிலையில், மேற்கொள்ளப்படுகின்ற சட்ட நடவடிக்கை தொடர்பாக திருப்தியின்மையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வெளிப்படுத்தப்படும் நிலையில், கடற்படையினரால் பல்வேறு நடைமுறைக் காரணங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

எனினும் குறித்த காரணங்களில் சமரசம் அடையாத கடற்றொழில் அமைச்சர், எமது கடல் பரப்பினுள் நுழைகின்ற இந்திய இழுவைப் படகுகளுக்கு எதிராக கடலில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளுமாறும், அவற்றை பிடித்து வாருங்கள் என்றும் கடற்றொழிலாளர்களிடம் தெரிவிப்பதுடன், அவ்வாறு கடலுக்கு செல்வதற்கு முன்னர் தனக்கு அறிவித்துவிட்டு செல்லுமாறும் தெரிவித்து வருகின்றார்.

கடற்றொழில் அமைச்சரின் வெளிப்படையான இந்தக் கருத்து, அவரின் அரசியல் எதிரிகளினாலும், இந்திய கடற்றொழிலாளர் விவகாரத்தினை தீர்க்க விரும்பாத தரப்புக்களினாலும், அவருக்கு எதிராக பயன்படுத்தப்படுகின்றது.

எனினும், இந்திய இழுவைப் படகுகளை தடுப்பதற்காக செயற்பாடுகளை எமது கடற்றொழிலாளர்கள் ஊடாக மேற்கொள்வதன் மூலம், கடற்படையினருக்கான தார்மீகக் கடப்பாட்டினை அதிகரித்து சட்டரீதியான நடவடிக்கைகளை அதிகப்படுத்துவதே கடற்றொழில் அமைச்சரின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

அதைவிட, கடலில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதன் மூலம், தமிழக மக்கள் மத்தியில் எமது கடற்றொழிலாளர்களின் அவலங்கள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்க முடியும் என்ற எதிர்பார்ப்பும் இன்னுமொரு அம்சமாக இருக்கின்றது.

அடுத்தாக இரண்டு நாட்டு கடற்றொழிலாளர்கள் மத்தியிலும் கச்சதீவில் சிநேகபூர்வ சந்திப்புகளை ஏற்படுத்தி அதன்மூலம் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தி பிரச்சினைக்கு சுமூகமான தீர்வினை எட்டும் முயற்சிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவை எவற்றையும் கண்டுகொள்ளாத கட்டுரையாளர், அரசியல் நோக்கங் கொண்ட கருத்தக்களை விழுங்கியவாறு கற்பனைகளையும் பொய்களையும் தனது கட்டுரையின் முடிவுகளாக வெளிப்படுத்தியிருப்பது கவலையளிக்கிறது.

'குருநகர் மற்றும் வல்வெட்டித்துறை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களினால் இழுவைமடி வலைத் தொழில் மேற்கொள்ளப்பட்ட போதிலும், கடல் வளம் அழிக்கப்படும் காரணத்தால் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது' என்ற கருத்து கட்டுரையில் சொல்லப்பட்டுள்ளது.

இழுவைமடி வலைத் தடைச் சட்டம் நல்லாட்சி என்று சொல்லப்பட்ட அரசாங்கத்தின் காலத்தில் உருவாக்கப்பட்டது. அதேவேளை, அரசியல் காரணங்களுக்காக, அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் இழுவைமடி வலைத் தொழிலை மேற்கொள்ளவதற்கு அப்போதைய அரசாங்கமே அனுமதியையும் வழங்கியிருந்தது.

எனினும், குறித்த தொழில்முறையை கைவிட்டு மாற்று தொழில் முறைக்கு மாற வேண்டும் என்று சம்மந்தப்பட்டவர்களிடம் தொடர்ச்சியாக கடற்றொழில் அமைச்சரினால் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

அடுத்தாக, 'கடலட்டை பிடிப்பிற்காக சீன நிறுவனங்களை டக்ளஸ் அழைத்து வந்திருக்கிறார். அந்த தொழில் நடவடிக்கைக்கு எதிராக வடக்கு மீனவர்கள் குரல் எழுப்பி வரும் நிலையில், ஒரு சில மீனவ சங்கப் பிரதிநிதிகளை தனது கைக்குள் போட்டுக் கொண்டு வெளிநாட்டு நிறுவனங்களின் தொழில் நடவடிக்கைகளை டக்ளஸ் பாதுகாத்து வருகின்றார்.' என்று கட்டுரையாளரின் தீர்மானகரமான கருத்தாக பொய்யான விடயம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உண்மையில், வடக்கு மாகாணத்தில் இதுவரையில் ஒரேயொரு சீன நிறுவனம் மாத்திரமே கடலட்டை குஞ்சு பொரித்தல் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது. அரியாலையில் அமைக்கப்பட்டுள்ள குயிலான் எனப்படும் குறித்த நிறுவனமும் கடற்றொழில் அமைச்சராக டக்ளஸ் தேவானந்தா இருக்கும் காலத்தில் கொண்டு வரப்பட்டது அல்ல. நல்லாட்சி என்று சொல்லப்பட்ட அரசாங்கத்தின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம். அதனை தவிர எந்தவொரு வெளிநாட்டு நிறுவனும் இதுவரை கடலட்டை சார்ந்த செயற்பாடுகளில் வடக்கு மாகாணத்தில் ஈடுபடவில்லை என்பதே உண்மையாகும்.

'யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை சுமார் 1200 இற்கும் மேற்பட்ட பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தளவு பண்ணைகளையும் ஒரு சில மீனவ சங்கப் பிரதிநிதிகளையும் கைக்குள் போட்டுக்கொண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்த பாதுகாத்து வருகின்றார்' என்பது கட்டுரையாளரின் கற்பனையின் உச்சம் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஒரு பண்ணையில் இடப்படுகின்ற அட்டைகளைப் பாதுகாப்பதற்கே கடற்றொழிலாளர்கள் பலரின் தொடர்ச்சியான உழைப்பு தேவைப்படும் நிலையில், 1200 இற்கும் மேற்பட்ட பண்ணைகள் ஒரு சிலரினால் பாதுகாக்கப்படுகின்றது என்பது வேடிக்கை.

கடலட்டைப் பண்ணைகளைப் பொறுத்தவரையில், பதவிகளில் இருந்து நாட்டாமை செய்து அப்பாவி கடற்றொழிலாளர்களின் முதுகுகளில் சவாரி செய்தவர்களும், மீன்களை திருடி விற்பனை செய்து வயிறு வளர்த்தவர்களும் கடலட்டைப் பண்ணைகளுக்கு எதிராக கருத்து வெளியிடுகிறார்கள் என்பதையும், பண்ணை அமைத்துள்ளவர்கள் அனைவரும் பிரதேச மக்கள் என்பதையும், நேர்மையான எண்ணத்துடன் கள விஜயங்களை மேற்கொள்கின்ற அனைவரும் புரிந்து கொள்ள முடியும். அதற்கு இந்த கட்டுரையாளரும் விதிவிலக்காக இருக்க முடியாது.

இன்னுமொரு சுவாரசிய விடயமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'வடக்கு கடலில் புலிகள் ஆதிக்கம் கொண்டிருந்த காலத்தில், இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறல்களை மேற்கொண்ட காட்சிகளை காண முடியாது' என்று ஒரு கதையும் கட்டுரையில் அவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது.

ஒருவேளை அந்தக் காலப் பகுதியில் கொழும்பில் வசித்துவந்த கட்டுரையாளர் அதனை காணாமல் இருந்திருக்க கூடும். ஆனால், இந்தியக் கடற்றொழிலாளர்கள் எல்லை தாண்டி வருவதே இல்லை என்ற கருத்து முற்றிலும் தவறானது.

அக்கால கட்டத்தில் எல்லை தாண்டி எதுவரை இந்திய இழுவைப் படகுகள் வந்து மீன் பிடித்தன. அவ்வாறு வரும்போது எவ்வாறான பொருட்களை ஏற்றிவந்து புலிகளுக்கு கொடுத்தார்கள், கடல் சமர்களின்போது கடல்புலிகள் எவ்வாறு இந்தியப் படகுகளை அரணாக பயன்படுத்திக் கொண்டார்கள், என்பதற்கெல்லாம் நேரடி சாட்சிகளாக, அப்போது படகோட்டிகளாகவும் முன்னாள் கடல்புலி போராளிகளாகவும் இருந்த பலர் இப்போதும் நம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

அவ்வாறானவர்களில் சிலர் அண்மையில் கச்சதீவில் இடம்பெற்ற சிநேகபூர்வ கலந்துரையாடலிலும் இலங்கை கடற்றொழிலாளர்கள் சார்பாக கலந்து கொண்டிருந்தனர்.

அதைவிட, ஈ.பி. டி.பி கட்சியின் அரசியல் செயற்பாடுகள் நெடுந்தீவில் ஆரம்பிக்கப்பட்ட 90களின் முற்பகுதியில் நெடுந்தீவை அண்மித்து வந்த சுமார் 18 இழுவைப் படகுகள் ஈ.பி.டி.பி. கட்சியினரால் கரைக்கு அழைத்து வரப்பட்ட நிலையில், கடல் வளத்தின் முக்கியத்துவம் பற்றிய அறிவுரைகளைக்கூறிய தற்போதைய கடற்றொழில் அமைச்சர் குறித்த இந்திய கடற்றொழிலாளர்களை பாதுகாப்பாக அனுப்பி வைத்தார்.

அப்போதும் வடக்கு கடல் தமது ஆதிக்கத்திலேயே இருப்பதாக புலிகள் கூறிக்கொண்டிருந்தனர்.

உண்மைகள் இவ்வாறு இருக்கையில் புலிகளின் காலத்தில் இழுவைப் படகுகள் வரவில்லை என்ற கருத்தை வெளிப்படுத்தும் கட்டுரையாளரின் நோக்கம் என்ன?

இவ்வாறான உண்மைக்கு மாறான கற்பனை கதைகளும், உசுப்பேத்தல்களும், துதிபாடல்களும் எமது மக்கள் எதிர்கொண்ட அழிவுகளுக்கான பிரதான காரணங்களில் ஒன்று என்பதை சில ஊடகங்களும்,

ஆய்வாளர்களாகவும் பத்தி எழுத்தாளர்களாகவும் தம்மைக் கருதிக் கொள்கின்ற பலரும் இன்னும் புரிந்து கொள்ளவில்லை என்பது வேதனையான விடயம்.

கடற்றொழில் அமைச்சரைப் பொறுத்தவரையில், தனது செயற்பாடுகளில் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டு சுட்டிக்காட்டப்படுமாயின் திருத்திக் கொள்ள தயாராக இருப்பதாக வெளிப்படையாகவே கூறிவருகின்றார்.

அதேவேளை ஊடகங்களினதும் ஆய்வாளர்களினதும் எழுத்துக்களும் கருத்துக்களும் வெறுமனே, பக்கங்களை நிரப்பும் - நேரத்தை கடத்தும் கற்பனைகளாக இருக்கக் கூடாது சமூக நலன் சார்ந்தவையாக இருக்க வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும்.

புதுடெல்லி

# காவற்துறையுடன் கைகோர்த்த ‘ட்ரூகோலர்‘



சைபர் குற்றங்களைத் தடுக்கும் வகையில் ‘ட்ரூகோலர் செயலி’ நிறுவனத்துடன் புதுடெல்லி காவல்துறை ஒப்பந்தமொன்றைச் செய்துள்ளது.

இது குறித்து புதுடெல்லி காவற்துறை சிறப்பு ஆணையர் ‘சஞ்சய் சிங்‘ கூறியதாவது, ”தற்போது இணைய வழி மோசடிகள் அதிக அளவில் நடைபெற்று வருகின்றன. அதிலும் தொலைபேசி மூலமாக இணைய வழி மோசடிகள் மிக அதிக அளவில் நடைபெற்று வருகின்றன.

அதனைக் கட்டுப்படுத்தும் விதமாக ட்ரூகோலர் செயலியுடன் டெல்லி காவல்துறை கைகோர்த்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் எந்த வித புகாரிலும் சிக்காத உண்மையான அழைப்பாளர்களுக்கு பச்சை சின்னம் மற்றும் நீல டிக் வழங்கப்பட்டு இவர்களுக்கு அரசாங்க சின்னமும் வழங்கப்படும்.

மேலும், தொலைபேசியில் மோசடி அழைப்புகள் வந்ததுமே எச்சரிக்கை அறிவிப்பு வரும் வகையில் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது” என்றார்.



பீகார்



## பெண்களை முத்தமிடும் ‘சீரியல் கிஸ்ஸரால்‘ பரபரப்பு

பீகாரில் அண்மைக்காலமாக மர்ம நபர் ஒருவர், பெண்களை வலுக்கட்டாயமாக முத்தமிட்டு வருகின்றமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


இது குறித்த CCTV காட்சிகள் இணையத்தில் வெளியானதைத் தொடர்ந்தே இச்சம்பவம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

குறித்த வீடியோவில் தொலைபேசியில் பேசியபடி வீதியில் சென்றுகொண்டிருந்த பெண்ணொருவரை ‘சீரியல் கிஸ்ஸர் என அழைக்கப்படும் மர்ம நபர் வலுக்கட்டாயமாகக் கட்டிப்பிடித்து முத்தம்கொடுத்துவிட்டு தப்பிச்செல்வது பதிவாகியுள்ளது.

இச்சம்பவம் கடந்த மார்ச் 10 ஆம் திகதி இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் இவ்வீடியோ வெளியானதைத் தொடர்ந்து குறித்த மர்ம நபரால் பாதிக்கப்பட்ட பலரும் இது குறித்து பொலிஸ் நிலையத்தில் புகார் அளிக்கத் தொடங்கியுள்ளனர்.

இதனால் பெண்கள் வெளியில் தனியாக நடமாட அச்சப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த நபரைத் தேடும் பணியில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

## ‘மூச்சுவிடுவதில் சிரமம் உள்ளதா? மக்களே உஷார்



இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் புதிய வகை வைரஸ் காய்ச்சல் பரவி வருகிறது. இன்புளூயன்சா -ஏ (Influenza A )வைரசின் துணை வகையான இந்த வைரஸ் `H3N2 `என அழைக்கப்படுகிறது.

இப்புதிய வகை வைரஸ் 15 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் மற்றும் முதியோரைதான் அதிகம் தாக்கும் என்று தகவல் வெளியாகியுள்ளது. இதனிடையே, இக் காய்ச்சலால் இந்தியாவில் இதுவரை 7 பேர் உயிரிழந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் தமிழ்நாட்டிலும் இக்காய்ச்சலானது தீவிரமாகப் பரவி வருவதால் இக் காய்ச்சல் தொடர்பாக வழிகாட்டு நெறிமுறைகளை தமிழ்நாடு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு அமைச்சு வெளியிட்டுள்ளது.

அதன்படி,”மூச்சுவிடுவதில் சிரமம் இருந்தால் மட்டும் இன்புளூயன்சாவுக்கான ஆர்.டி.பி.சி.ஆர் பரிசோதனை செய்ய வேண்டும் எனவும் ப்ளூ காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டவர்கள் 7 நாட்கள் வரை வீட்டிலேயே தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் காய்ச்சல் உள்ளவர்கள் மருத்துவர் ஆலோசனைப்படி மருந்து எடுக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தீவிர காய்ச்சல் உள்ள குழந்தைகள், கர்ப்பிணிகள், 65 வயதிற்கு மேற்பட்டோர், இணைநோய் இருப்போர் என 2 வகைகளில் இருப்பவர்களுக்கு இன்புளூயன்சாவுக்கான பரிசோதனையோ, மருத்துவமனை அனுமதியோ தேவையில்லை. இவர்கள் வீட்டுத்தனிமையில் இருந்தால் போதுமானது.

அதேவேளை சி வகை பாதிப்பான தீவிர காய்ச்சல், தொண்டை வழி, மூச்சு விடுவதில் சிரமம், நெஞ்சு வலி, ரத்த அழுத்த குறைவு இருந்தால் மட்டும் இன்புளூயன்சா வைரசுக்கான ஆர்டிபிசிஆர் பரிசோதனை செய்ய வேண்டும். குழந்தைகளுக்கு தொடர் காய்ச்சல், உணவு உண்ணாமை, மூச்சு விடுவதில் சிரமம் இருந்தால் இந்த ஆர்டிபிசிஆர் பரிசோதனை கட்டாயம் செய்ய வேண்டும். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டும்” இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான்

# வன்முறையில் இம்ரான் ஆதரவாளர்கள்;

### பாகிஸ்தானில் பரபரப்பு



பாகிஸ்தானில் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் இம்ரான்கானின் தலைமையிலான அரசு கவிழ்ந்தது. இதனையடுத்து எதிர்க்கட்சி தலைவராக இருந்த ஷபாஸ் ஷெரீப் புதிய பிரதமராக பொறுப்பேற்றார்.

எனினும் தனது ஆட்சி கவிழ்ப்பில் வெளிநாட்டு சதி இருப்பதாகவும் எனவே விரைவில் தேர்தல் நடத்த வேண்டும் எனவும் இம்ரான் தனது ஆதரவாளர்களுடன் போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்.

அதேவேளை, இம்ரான்கான் மீது ஊழல், பொலிஸாருக்கு மிரட்டல் விடுத்தல் உட்பட பல்வேறு பிரிவுகளில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்குகள் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறது.

இதனிடையே, பரிசுப்பொருட்கள் பெற்றது தொடர்பாக வருமான கணக்கை தாக்கல் செய்யாதது தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில் இம்ரான்கானை கைது செய்ய நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.

இதையடுத்து இம்ரான்கானைக் கைது செய்ய நேற்றுமுன்தினம் லாகூரில் உள்ள அவரது வீட்டிற்கு பொலிஸார் சென்றிருந்தனர். இதன்போது பொலிஸாருக்கும் இம்ரான்கானின் ஆதரவாளர்களான பாகிஸ்தான் தெக்ரிக் இ இன்சப் கட்சியினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

சீனா

## ஓய்வு பெறும் வயதை உயர்த்த முடிவு



அதிகரித்து வரும் மூத்த குடி மக்கள் பிரச்சினையை சமாளிக்க ஓய்வு பெறும் வயதை உயர்த்த சீனா முடிவு செய்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

எனினும் இது குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை, தற்போது, சீனாவின் ஓய்வூதிய வயது ஆண்களுக்கு 60 ஆகவும், பணிபுரியும் பெண்களுக்கு 55 ஆகவும் உள்ளது. அதேசமயம், தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களின் ஓய்வு வயது 50 ஆகவும் உள்ளது.

### இலங்கை எதிர் நியூசிலாந்து:

# நாளை ஆரம்பிக்கிறது இரண்டாவது டெஸ்ட்



இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது வெலிங்டனில் நாளை அதிகாலை 3.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இறுதிப் பந்தில் இலங்கை தோற்றிருந்தாலும் நியூசிலாந்துக்கு பலத்த சவாலை வழங்கியிருந்தது.

அந்தவகையில் இலங்கையணியில் பெரும்பாலும் மாற்றங்கள் இருக்காதென்றபோதும் தொடர்ந்து விக்கெட் காப்பு, துடுப்பாட்டத்தில் சொதப்பி வரும் நிரோஷன் டிக்வெல்லவுக்குப் பதிலாக நிஷான் மதுஷ்கவுக்கு அறிமுகம் கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

தவிர, குறுகிய கால இடைவெளியில் அடுத்த போட்டி ஆரம்பிக்கின்ற நிலையில் லஹிரு குமார காயமடையும் வாய்ப்புகள் காணப்படுவதால், அவரை விஷ்வ பெர்ணாண்டோ அல்லது மிலான் ரத்னாயக்க பிரதியிடும் வாய்ப்புகளும் காணப்படுகின்றன.

மறுப்பக்கமாக நியூசிலாந்து அணியில் காயமடைந்த நீல் வக்னரை ஸ்கொட் குக்லஜின் பிரதியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.



## சம்பியன்ஸ் லீக்: காலிறுதியில் சிற்றி

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றி தகுதி பெற்றுள்ளது.

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான ஆர்.பி லெய்ப்ஸிக்கின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான இறுதி 16 அணிகளுக்கிடையிலான முதலாவது சுற்றுப் போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் சமப்படுத்தியிருந்த சிற்றி, தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியில் 7-0 என்ற கோல் கணக்கில் வென்று 8-1 என்ற மொத்த கோல் கணக்கில் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

சிற்றி சார்பாக, எர்லிங் பிறோட் ஹலான்ட் ஐந்து கோல்களைப் பெற்றதோடு, இல்கி குன்டோகன், கெவின் டி ப்ரூனே ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



## இங்கிலாந்தை வெள்ளையடித்த பங்களாதேஷ்

இருபதுக்கு -20 சர்வதேசப் போட்டித் தொடரில் இங்கிலாந்தை பங்களாதேஷ் வெள்ளையடித்தது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் வென்று தொடரை ஏற்கெனவே கைப்பற்றியிருந்த பங்களாதேஷ், மிர்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே 3-0 என இங்கிலாந்தை பங்களாதேஷ் வெள்ளையடித்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

பங்களாதேஷ்: 158/2 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: லிட்டன் தாஸ் 73 (57), நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ ஆ.இ 47 (36) ஓட்டங்கள். பந்துவீச்சு: கிறிஸ் ஜோர்டான் 1/21 [3], அடில் ரஷீட் 1/23 [4], சாம் கர்ரன் 0/28 [4])

இங்கிலாந்து: 142/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: டேவிட் மலான் 53 (47), ஜொஸ் பட்லர் 40 (31) ஓட்டங்கள். பந்துவீச்சு: தஸ்கின் அஹ்மட் 2/26 [4], முஸ்தபிசூர் ரஹ்மான் 1/14 [4], ஹஸன் மஹ்மூட் 0/29 [4], ஷகிப் அல் ஹஸன் 1/30 [4])

போட்டியின் நாயகன்: லிட்டன் தாஸ்

தொடரின் நாயகன்: நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ

### கொல்லநுலையில் இல்ல விளையாட்டுப் போட்டி:

## முதலிடம் பெற்ற வள்ளுவர் இல்லம்

■ வ. திவாகரன்

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட கொல்லநுலை விவேகானந்த வித்தியாலயத்தில் இல்ல மெய்வல்லுனர் திறனாய்வு விளையாட்டுப் போட்டியின் இறுதி நாள் விழாவானது பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

கம்பர், வள்ளுவர் இல்லங்களாக பிரிக்கப்பட்டு நடைபெற்ற குறித்த போட்டியில் வள்ளுவர் இல்லம் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டமையுடன், இல்லச்சோடனை, அணிநடை மரியாதை போன்றவற்றில் கம்பர் இல்லம் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது.



### இன்று ஆரம்பிக்கிறது ODI தொடர்:

## தென்னாபிரிக்காவை வீழ்த்துமா மேற்கிந்தியத் தீவுகள்?

தென்னாபிரிக்க, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரானது, கிழக்கு இலண்டனில் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

குயின்டன் டி கொக், றீஸா ஹென்ட்றிக்ஸ், றஸி வான் டர் டுஸன் என முன்வரிசை வீரர்கள் போர்மில் இருக்கின்ற நிலையில் அணித்தலைவர் தெம்பா பவுமா, அணியில் தனத்திடத்தை உறுதிப்படுத்த சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்த வேண்டியுள்ளார்.

-அணித்தலைவர் பொறுப்பிலிருந்து விலகியுள்ள நிக்கலஸ் பூரானும் அணியில் தனதிடத்தை நியாயப்படுத்த தொடர்ச்சியான பெறுபேறுகளை வெளிப்படுத்த வேண்டியுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 16 மார்ச் 2023, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.